## ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 46.

### கட்சிக்காரர்கள் அபிமானம்.

வக்கீல் தொழிலிலும் நேட்டாலிலும், டிரான்ஸ்வாலிலும் வித்தியாசம் காணப்பட்டது. நேட்டாலில் பாரிஸ்டராக இருக்கிற ஒருவர் அட்வோகேட்டாகவும், அட்டர்ணியாகவும் கூட கோர்ட்டுகளுக்குப் போகலாம். ஆனால் டிரான்ஸ்வாலில் பம்பாயிலுள்ளதே போல், அட்டர்ணிக்கும் அட்வொகேட்டுக்கும் தனித் தனி யோக்கியதைகள் ஏற்பட்டிருந்தன. ஒரு பாரிஸ்டர், அட்வொகேட்டாக இருக்கலாமா அல்லது அட்டர்ணியாக இருக்கலாமா என்பது பற்றித் தீர்மானிக்க பரீக்ஷையில் சேரவேண்டும். எனவே, நேட்டாலில் நான் அட்வொகேட்டாகவும், டிரான்ஸ்வாலில் அட்டர்ணியாகவும் இருந்தேன். ஏனெனின் தென் ஆப்பிரிக்காவிலும் அட்வொகேட்டாக இருந்தால் இந்தியர்களுடன் நெருங்கிய சம்பந்தத்தைப் பெறமுடியாது. வெள்ளைக்கார அட்டர்ணிகளுடன் போட்டி போட வேண்டியதாகவும் இருந்திருக்கும்.

ஆனால் டிரான்ஸ்வாலிலும், அட்டர்ணிகளும் மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜராகிப் பேசலாம் என்று ஒரு சட்டமிருந்தது. ஒரு முறை நான் ஜோகன்ஸ்பர்க்கில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு வழக்கின் சார்பாக வாதித்துக் கொண்டிருக்கையில் என் கட்சிக்காரர் என்னை ஏமாற்றிவிட்டதாகவும் அவன் சாக்ஷிக் கூண்டில் இருக்கையில் பொய் சொன்னதால் முன்னுக்குப்பின் முரணைச் சொல்லி தவிக்கிறானென்பதையும் அறிந்து கொண்டேன். ஆகலின் அதிக விவாதம் செய்யாமல் வழக்கைத் தள்ளிவிடும்படி மாஜிஸ்ட்ரேட்டைக் கேட்டுக்கொண்டேன். எதிர்க்கட்சி வக்கீல் நான் இவ்வாறு கூறியதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். மாஜிஸ்ட்ரேட்டும் என் உண்மையைக் கண்டு திருப்தியடைந்தார். ஒரு பொய் வழக்கை என்னிடம் கொண்டு வந்ததற்காக என் கக்ஷிக்காரரைக் கோபித்துக்கொண்டேன். நான் பொய் வழக்குகளை ஏற்றுக்கொள்வதில்லை என்பதை அவர் அறிவார். நான் உண்மையை எடுத்துக் கூறியபின்னர் அவர் தன் தவறை ஒப்புக்கொண்டார். எனவே, அவருக்கு விரோதமாகத் தீர்ப்பு சொல்லும்படி மாஜிஸ்ட்ரேட்டைக் கேட்டுக்கொண்டதிலும் அவருக்கு என் மீது கோபமில்லை. மேலும், இவ்வழக்கில் இவ்வாறு நடந்துகொண்டதால் என்தொழிலுக்கு எத்தகைய சிரமமும் ஏற்படாமல் சௌகரியமாகவே இருந்தது. இவ்வாறு நான் உண்மையைக் கடைப்பிடித்துச் செல்வதால் எனக்குச் செல்வாக்கு அதிகமாகிற வித்தியாசம் பாராட்டும் வெள்ளையர்களின் அபிமானத்தையும் பெற்று வந்தேன்.

### மறைக்கும் சுபாவமில்லை.

மேலும் நான் வக்கீல் தொழில் செய்து வந்தபோது என் அறியாமையை மறைத்து வைக்கும் வழக்கம் என்னிடத்தில் இருந்ததில்லை. என் கட்சிக்காரர்களிடமும், தோழர்களிடமும் அதைக் கூறிவிடுவேன். என்னால் சமாளிக்க முடியாதென்று தோன்றிய போதெல்லாம் பகிரங்கமாக அதை வெளியிட்டு வேறு வக்கீலை நாடும்படி சொல்லி விடுவதுண்டு. அல்லது நானே என்னை விடத் தேர்ந்த வக்கீல்களிடம் ஆலோசனை கேட்பதுமுண்டு. நான் இவ்வாறு உண்மையுடனும், கபடமில்லாமலும் நடந்துகொண்டதால் என் கட்சிக்காரர்கள் என்னிடம் அபிமானம் கொண்டனர். நான் தேர்ந்த வக்கீலிடம் ஆலோசிக்க விரும்பியபோதெல்லாம் அதற்கான செலவுகளையும் கட்சிக்காரர்களே ஏற்றுக்கொண்டார்கள். நான் பொது ஜன சேவையில் இறங்கியபோது இந்த அபிமானமும் நம்பிக்கையும் எனக்கு அதிக உதவியைச் செய்தன.

இந்திய சமூகத்துக்குச் சேவை செய்யவே நான் தென்னாப்பிரிக்காவில் வக்கீல் தொழிலை ஏற்றுக்கொண்டேனென்பதை முன்னரே அறிவித்திருக்கிறேன். எனவே, இச்சேவைக்கும் பொது ஜனங்களிடமிருந்து செல்வாக்கையும், நம்பிக்கையையும், பெற வேண்டியது அவசியமாக இருந்தது. பல இந்தியர்களிடம் நான், அவர்களுடைய உரிமைகளுக்காக அவர்கள் சிறையிலும் கஷ்டப்படத் தயாராக இருக்கவேண்டுமென்று யோசனை கூறியபோது பணத்துக்காகவே தொழில் செய்து வந்தவர்களும் அதையெல்லாம் விட்டுவிட்டுச் சிறை செல்லத் தயாரானார்கள். அவர்கள் நான் கூறிய தன் உண்மையை ஆராய்ச்சி செய்து பார்த்து, அவ்வாறு செய்தார்களென்று கூற முடியாது. ஆனால் அவர்கள் என்னிடம் வைத்த நம்பிக்கையினாலும், அபிமானத்தினாலுமே அவ்வாறு செய்தார்கள்.

இதை நான் எழுதும்போது எனக்குப் பல இனிய விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. நூற்றுக் கணக்கான கக்ஷிக்காரர்கள் என் நண்பர்களாகவும், உடன் உழைப்பவர்களாகவும் இருந்து என்னுடன் பொதுஜன சேவையில் வேலை செய்தார்கள். மகா கஷ்டங்களும் அபாயங்களும் நிறைந்த வேலையை நான் மேற்கொண்டிருந்தாலும் அவர்களுடைய கூட்டுறவினால் எனது வாழ்க்கை ஒருவாறு திருப்திகரமானதாகவே இருந்தது.

---

### பாம்பு கடிக்குச் சிகிச்சை.

நமது நாட்டில் பாம்பு கடித்து வெகுபேர் மாண்டுபோவது ஸர்வ ஸாதாரணமாயிருக்கிறது. கவர்ன்மெண்டு வைத்தியசாலைகளிலும் பாம்பு கடிக்கு நல்ல வைத்தியம் செய்வதாகத் தாணோம். சமீபத்தில் தலையூரில் ஒரு ஸ்திரீயைப் பாம்பு கடித்து நூதனமான வகையில் பிழைத்த சமாசாரத்தை அறிவிக்கிறேன்.

விஷம் தீண்டியது "கட்டு விரியன்" என்று சொல்லப்படும் ஓர்விதப் பாம்பு. மேற்படி விஷம் தீண்டி ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஒருவருடைய போதனையின் பேரில் சில பெட்டைக் கோழிகளைக் கொண்டு வரச் சொல்லி, ஒரு கோழியின் மலத்துவாரத்திலிருக்கும் இறகுகளைக் களைந்து விட்டு மேற்படி கோழியின் மலத்துவாரத்தின் வாயைப் பாம்பு கடித்த புண் மேல் வைத்துப் பிடித்து சுமார் 15 நிமிஷங்களுக்கெல்லாம் மேற்படி கோழி இறந்து போனதுமன்றி, அதன் கண்களும் நீலமாய் மாறிவிட்டன. உடனே அந்தக் கோழியை எறிந்து விட்டு இரண்டாவது கோழி வைக்கப்பட்டு அதுவும் அப்படியே இறந்து விட்டது. மறுபடி மூன்றாவது கோழியை வைத்துப் பார்த்ததில் அது 40 நிமிஷ நேரத்தில் உயிர் துறந்தது. நான்காவது கோழி ஒரு மணிக்கு மேல் வைத்தும் அது சாகவும் இல்லை; களைக்கவும் இல்லை. இதிலிருந்து விஷம் பூராவும் எடுபட்டுவிட்டது என்று புலப்பட்டதுமல்லாமல் பாம்பு கடித்த ஸ்திரீயும் மயக்கம் தெளிந்து சுகமடைந்தாள். மேற்படி ஸ்திரீ பூரண சௌக்கியத்தோடிருக்கிறாள்.

இதிலிருந்து கோழிக்குப் பாம்பின் விஷத்தை மனித சரீரத்திலிருந்து கிரஹிக்கும் சக்தி யுண்டு என்று தெரிகிறது என்று ஒரு நிருபர் "சுதேசமித்திர"னில் எழுதியிருக்கிறார்.

---

## வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

6-வது அத்தியாயம்.

### துட்ட நாய்கள் செய்த கெட்ட வேலை.

(முன் தொடர்பு)

உலகில் வேடிக்கை பார்க்கலாமென்ற நோக்கத்தோடு கையை முகம் கொண்டு பரிதி கிழக்கே கிளம்பினான். அம்மான்! அக்காள்! வேடிக்கை! இங்கே வந்து பாருங்களென்றாள் பேச்சி.

மீனாக்ஷியும், விசாலாக்ஷியும் வந்தெட்டிப் பார்த்தார்கள்.

பேச்சி— இதென்ன! பைத்தியகாரனோ!

மீனாக்ஷி— இல்லை. வழிப்போக்கனாயிருக்கலாம்!

விசாலாக்ஷி—ஒரு வேளை கிழப் பிணமாயிருக்குமோ!

மீ— இல்லை. அதோ பார். கை கொசுவைத் துரத்துகிறது.

வி— ஆமாம். பிராமணர் போல் தெரிகிறதே!

மீ—நேற்று தங்கை பேச்சி சுத்தமில்லாமல் இங்கே தானே படுத்திருந்தாள். சாணி ஜலம் தெளிக்கக் கூடவில்லையே. அவள் தலைக்கு வைத்திருந்த தலையணையையு மன்றோ பிராமணர் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்? பாவம்! தெரியாது போலும்.

திடுக்கென விழித்தார் நேற்றிரவு படுத்த வைதீகர். விஷயமறிந்தார். துக்கமொரு பக்கமும், வெட்கமொரு புறமும், அவமானமொரு பக்கமும் வைதீகரை வளைத்துக் கொண்டன. வைதீகர் வேறொரு பக்கத்தில் தலை கவிழ்ந்த வண்ணமாய் ஊமைபோல் விரைவில் சென்று விட்டனர்.

அசாக்கிரதை அவமானத்தைப் பரிசளிக்கும். ஜாக்கிரதை சந்தோஷத்தை நுகர்விக்கும். கவனவீனம் கவலைப் பயனமே. யோசனை யற்ற விடம் பாயப்பிசு விடம் என்னும் உண்மைகளை அந்நேரத்திலேயே வைதீகர் தெரிந்து கொண்டதோடு தான் இராப் படுத்திருந்த மனை வேசிகளினுடைய தென்பதையும் சில காரணங்களாலறிந்து கொண்டார்.

ஐயோ! தெய்வமே! தலை விதி வசம் நம் மதியையும் மயக்கி விட்டதே; தீட்டு நம்மை வீட்டிலிருந்து விரட்டிக் கொண்டு வருகிறதே; 'விதி வலிது' என்பது மெய்யே யென்றார். 'பண்டை விதியின் பய'னென்பதை உணர்ந்தார். பிரிய மனைவியும், பிள்ளையும் விட்டுப் பிரிந்தோமே யென ஏங்கினார். சீ! அவர்கள் தீய வழி இறங்கி விட்டார்கள் எனக் கூறினார். மனம் வெம்பினார். அவ் ஊரிலேயே வேறோரிடத்திற்குச் சென்று ஸ்நான பானங்களைப் பாக்கி வைக்க வில்லை. புதுத் துண்டொன்றும் வாங்கினார். பிரயாணத்தை அமைத்துக் கொண்டார். வேறோர் ஊரைக் கண்டார். குற்றவாளிகளைத் தண்டித் தடிப்பது போல் வைதீகர் மேல் வெய்யில் கொடூரமாக அடித்தது. வெய்யில் பெருமை கொண்டோர் நெஞ்சம் போல் எரிந்து கொண்டிருந்தது. வைதீகருக்கு அக்கினிக் குழம்பை தலையில் வார்ப்பது போலிருந்தது. அகோர வெய்யிலினாலும், பக்கத்திலுள்ள பட்டணத்தில் திருவிழா ஆனதினாலும் இவ் ஊரில் ஜனங்க ளதிகமாய்த் தென்பட வில்லை. இங்குதொரு பாளையக்காரர்வீட்டில்கட்டில் கால்கள் போல் நாய்களுண்டு. வைதீகரை நாய்கள் நான்கும் வளைத்துக் கொண்டன. வைதீகர் ஓடினார். நாய்கள் பின்னால் துரத்தின. சிறிது தூரம் ஓடிய வைதீகர் கல்லிடறிப்பக்கத்திலுள்ள ஓர் பள்ளத்தில் குப்புற விழுந்தார். வைதீகரை ஒரு நாய் வேஷ்டியைக் கடித்து இழுத்தது. வேறொரு சுணங்கன் பூணூலைப் பற்றி இழுத்தது. மற்றொரு ஞமலி தலையில் சிறு கருங் குருவி உட்கார்ந்திருப்பது போன்ற சிறு உச்சிக் குடுமியை இழுத்தது. இன்னொரு வயிரவர் வாகனம் அவர் தண்டைக் கடித் திழுத்தது. பயந்த வைதீகர் பள்ளத்திலேயே அப்புறமிப்புறமாகப் புரண்டு கூ! கூ!! எனக் கத்தினர். இச் சப்தத்தைக் கேட்ட பாளையக்காரருடைய குதிரைச் சேவகர்களான ஆதித் திராவிடர்களிருவர் ஓடி வந்தனர். வைதீகர் இவர்களிருவரையும் கை கூப்பி வணங்கி உதவி புரியும்படி வேண்டினார். உடனே இவர்கள் நாய்களைத் துரத்தி வைதீகரை மீட்டினர். அப்பொழுது தான் வைதீகர் தான் விழுந்து கிடந்தது எலும்புகள் நிறைந்த பள்ளமென அறிந்தார். இப் பள்ளத்தில் தினமும் நாய்கள் அருந்தியது போக மீதி எலும்புகளைப் போடுவது வழக்கம். துர் நாற்றம் சர்வ நடனம் செய்து கொண்டிருந்தது. வைதீகர் ஊமை கனவு கண்டது போலொன்றும் சொல்லாது அவ்விடம் விட்டகன்றார்.

(இன்னும் வரும்.)

---

### ஐரோப்பியர்கள் நெருப்பு மிதித்தல்.

நெட்டாலில் நடந்த இந்து உற்சவத்திலே நெருப்புக் குளிக்கிற போது இரண்டு ஐரோப்பியரும் இந்தியர்களுடன் நெருப்பில் நடந்தனர். அந்த வேடிக்கை பார்ப்பதற்காக நாலாயிரத்துக்கு அதிகமான ஜனங்கள் வந்திருந்தனர்.

இந்த நெருப்பு மிதித்தல் சடங்கு விஷயமாய் இந்தியர்களுக்கும் ஐரோப்பியருக்கும் தர்க்க மேற்பட்டு ஐரோப்பியர் நெருப்பில் நடக்க முடியுமா என்று இந்தியர் அவர்களைப் போட்டிக் கழைத்ததால் இந்த சம்பவம் நேரிடலாயிற்று. ஜோகன்ஸ்பர்க்கிலுள்ள காமின்ஸ், ஹாரண்ட் ஜாக்கோஸ் என்னும் இரண்டு ஐரோப்பியர் நம்பிக்கைப் பலத்தால் நெருப்பின் மீது நடக்கலாமென்று காட்டுவதற்காக இந்தியரின் 'சவாலை' ஒப்புக் கொண்டனர். இந்த வேடிக்கையைப் பார்ப்பதற்காக வந்திருந்த ஜனங்களுக்கு இருக்க இடம் போதாமல் கூரைகளிலும் மரங்களிலும் ஏறியிருந்தார்கள். தீக் குழியில் பத்து டன் விறகு எரிக்கப்பட்டு அனல் கங்குகள் நிறைந்திருந்தன. அதன் மேல் முதவில் இரண்டு இந்தியரும் அவர்களுக்குப் பின் ஹாரண்ட் ஜாக்கோஸ், காமின்ஸ் என்ற இரு ஐரோப்பியரும் எவ்வித சேதமு மின்றி நடந்து சென்றனர்.

ஹாரண் ஜாக்கோஸ் தீக் குழியில் முக்கால் பக்கம் வரையில் சாதாரண நடையில் சென்று பிறகு கடைசிப் பாகத்தில் துரிதமாய் நடந்து சென்றார்.

காமின்ஸ் என்பவர் தீக் குழியின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் வரையில் சாதாரண நடையிலேயே சென்றார். அவர்கள் சாமர்த்தியத்தைப் பற்றி இந்தியர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அவர்களிருவருக்கும் காலில் பொக்களம் ஏற்பட்டிருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் அதற்குப் பிறகு நடந்த ஊர்வலத்திலும் சேர்ந்து கொண்டனர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தலைவர்கள் உறக்கம்.

"ஜஸ்டிஸ்" சாற்றுவது:—

சுயராஜ்யக்கட்சி சீர்கெட்டுத்தோல்வியடைந்த காரணத்தினால் அதன் எதிரியான ஜஸ்டிஸ் கட்சி மிகவும் பிரபல நிலைமைக்கு வந்திருக்கிறது. தேர்தல் தகராறுகளும் வாக்குவாதங்களும் தீர்ந்த பிறகு ஜனங்கள் இவ்விரண்டு கட்சியாரையும் நிறுத்துப்பார்க்க ஆரம்பித்ததில் அது ஜஸ்டிஸ் கட்சிக்கு அனுகூலமாக முடிந்திருக்கிறது. இன்று ஜஸ்டிஸ் கட்சி பொதுஜன மதிப்பில் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் நிற்கிறது. ஜஸ்டிஸ் கட்சியின் நடவடிக்கைகள் சுத்தமாவும் நிர்மலமாகவுமிருக்கின்றன. சுயராஜ்யக்கட்சியார் நடத்தைபோல கருத்து கசுமாலமாய்க் காணப்படவில்லை. அரசியல் எதிரிகள் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களின் ராஜதந்திரச்சிறப்பை வியந்து என்ன செய்வதென்று தோன்றாமல் மலைத்துப்போயிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் தமது வார்த்தையைக் காப்பாற்றி வந்த நேர்மையால், அவர்கள் வார்த்தை அவர்கள் தொடுக்கும் உறுதி மொழிப் பத்திரமாகியிருக்கிறது. இதற்கும் சுயராஜ்யக்கட்சியாரின் மாறுகிற, திரிந்து கூறுகிற கொள்கைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்று பாருங்கள்! சுயராஜ்யக் கக்ஷி வீரர்களின் சுற்றுப்பிரயாணங்களும், தேசீய வார இடி முழக்கங்களும், சுயராஜ்யக்கட்சித்தலைவர்கள் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குப் பேட்டி கொடுத்து போட்ட சத்தமும், பொதுஜன மதிப்பில் ஜஸ்டிஸ் கட்சியாரின் நேர்மையான கொள்கைகளைக் குறைத்துவிடவில்லை. இன்று ஜஸ்டிஸ் கட்சி இவ்வளவு மதிப்பான நிலைமைக்கு வந்திருந்த போதிலும், நமது தலைவர்களின் உறக்கத்தைப்பற்றி நாம் பெரிதும் வருந்த வேண்டியிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி இப்போது இவ்வளவு வல்லமையுள்ள நிலைமைக்கு வந்ததற்கு நமது எதிரிகளின் தவறுகளும் முட்டாள்த் தனங்களும் காரணமேயன்றி நமது சொந்த முயற்சி காரணமல்லவென்பதை நாம் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். பாமர ஜனங்களுக்கு அரசியல் விஷயமாய்ப்போதிப்பதற்காக நமது கட்சியரால் கட்டுப்பாடாக எதும் வேலை நடப்பதாகத் தெரியவில்லை. இவ்வித வேலைக்கு நமது மாகாணத்தின் வடபாகத்தில் தக்க பிரசாரகர்களும் தலைவர்களும் இல்லை. தென்பாகத்திலும், இளைப்பு சலிப்பில்லாமல் பிரசாரம் செய்து வரும் மாபெரும்தேசாபிமானியாகிய திரு. ஈ. வெ. இராமசுவாமி நாயக்கரவர்கள் வேலையைத்தவிர வேறு அரசியல் பிரசாரம் எதாவது நடப்பதாகச் சொல்ல முடியாது. திரு. இராமசுவாமி நாயக்கரவர்களின் உற்சாகமும் ஊக்கமும் எவ்வளவு அபாரமாயினும், அவர் என்னதான் மின்னல் போல சுற்றுப்பிரயாணம் செய்து வந்தாலும் அவர் ஒற்றை ஆள்தான். இப்படி ஒரே யொருவரின் முயற்சியால் மாத்திரம் ஜஸ்டிஸ் கட்சி முன்னேறி உச்ச நிலையடைந்து விடுமென்று எதிர் பார்ப்பது புத்திசாலித்தனமல்ல. ஆகையால் ஜஸ்டிஸ் இயக்கத்தின்கொள்கைகளை நம்புகிறவர்களுக்கும் சமத்துவம், விடுதலை என்ற கொள்கைகளைப் பரப்புவதில் அது செய்திருக்கும் வேலையை உணர்ந்தவர்களுக்கும் நாம் ஒரு வேண்டுகோள் செய்துகொள்ள விரும்புகிறோம். ஜஸ்டிஸ் கட்சி இப்போது பொதுஜனமதிப்பைப் பெற்றதைப்பற்றி நம்மை கெட்டிக்காரரென்று நம்மை நாமே புகழ்ந்து கொள்ளுகிற தன்மை நமக்குள் உண்டாகியிருக்கிறது. நாம் இன்னும் மிகவும் வல்லமையுள்ள எதிரிகளுடன் போர் புரிந்து வெற்றி பெற வேண்டியிருக்கிறது. சமுதாய விஷயங்களிலும் அரசியல் துறையிலும் பார்ப்பனீய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு நமது எதிரிகள் வைராக்கியத்துடன் முயற்சி செய்து வருகிறதாக அறிகுறிகள் காணப்படுகின்றன. இது விஷயத்தில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் நமது தலைவர்களும், பிரசாரகர்களும் உறங்குவது சரியல்ல. நாம் ஒருவரையொருவர் குற்றம் சொல்லவேண்டியதில்லை. மற்றவர்கள் தங்கடமையைச் செய்கிறார்களா, இல்லையா என்று கவனியாமல் நாம் ஒவ்வொருவரும் நமது கடமையைச் செய்வோமாக. பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்ய வேண்டுமென்று காலம் சென்ற நமது தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகையால் நாம் போருக்காக இடைகட்டிக்கொண்டு, நிமிர்ந்த தலையுடனும், பரிசுத்த இருதயத்துடனும், நமது லட்சியத்தை நோக்கி முன்னேறிச்செல்லுவோமாக. நமக்கு முன் ஒரு திட்டமான லட்சியத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த வருடத்துக்குள் ஒரு லட்சம் தொண்டர்களையாவது சேகரிக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ளுவோமாக. இந்த வேண்டுகோள் வீண் போகாதென்று நம்புகிறோம்.

காலஞ் சென்ற திருவாளர்.

## திருமேனிநாத நாடாரவர்கள் பேரில்

# இரங்கற் பாக்கள்.

தென்னவன் பதியின் கண்ணே சிருடை நல்லைதனில்
அன்னவன் குல வழியில் அவதரித்த திருமேனி
என்னவன் பெருமை சொல்! எளியே னுரைக்கப் போமோ
சின்னவன் வயதில் அந்தோ! சென்றிட்டான் பொன்னுலகே.

பலவகைக் கலை பயின்றான் பாங்கெழுந்த அறிவு கொண்டான்
நல மிகு பத்திரிகை "நாடார் குல மித்திர" னின்
பல மிக மானேஜர் பதவி வகித்திருந்து
குல மகில தேச மக்கள் குறிக் கோளாய்க் கொண்டுழைத் தான்.

காந்தி வழி கண்டான் காலடி பற்றிச் சென்றான்
சாந்த மூர்த்தி யானான் தண்மைச் சாகரமானான்
எந்திழை மோகம் நீத்தான் எளியோர் முகம் பார்த்தான்
நீந்தி யிப் பிறவிக் கடல் நீங்கினான் அரனடிக்கு.

தீண்டாமைக் கண்டனன் திட சத்தியாக்கிரகி
வேண்டாமை கொண்டவரும் விருப்பங் கொள் இன் சொலான்
தாண்டாமை கொள் கடலில் தண்ணீ ரற வற்றினும்
தோன்றாமை கிடையா இத் தூயனிடம் புன் முறுவல்.

சித்தப் பரிசுத்தனிவன் சிறந்த நற் கதருடையோன்
முத்தி தரும் பக்தியில் முதிர்ச்சி யடைந்துள்ள வள்ளல்
அத்தனது படைப்பில் அனைத் துயிர்க்கும் காருண்யம்
புத்த னெனப் புகழுமாறு பொதிந்து பொலி வுற்றிருந்தான்.

தந்தை தாய் பந்து ஜனம் சந்தையிலே வந்த கூட்டம்
எந்தையார் கடவுளாரின் இணையடியே சொந்த மெனுஞ்
சிந்தையே கொண்டேங்கித் திருவடி கோரி நின்று
நொந்து நாம் தவித்து நிற்க நோக்கினன் விண்ணுலகே.

மறு மேனி யுண்டாயின் வருவா யெம் கலி தீர்க்க
திருமேனி உன் பிரிவால் தியங்கிறோம் நின் னருமை
ஒரு மேனி காணமல் உயிர்க்கிறோம் அந்தோ! தெய்வ
உரு மேனி மறைத்து மேலே உம்பரிடை கலந்தனையே.

கு. பொன்னையா,
அருப்புக்கோட்டை.

## எனது அனுதாபம்.

காலஞ் சென்ற உயர் திருவாளர். திருமேனிநாத நாடார் அவர்கள் அகால மரணங் குறித்து யான் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவாளர். திருமேனி நாதரவர்கள் மரணத்தால் அன்னவர் குடும்பத்தாருக்கு நேர்ந்த நஷ்டத்தைவிட நாடார் சமூகத்துக்கே அதிக நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்பதற்குச் சந்தேகமில்லை. அன்னவர் உயிரோடிருப்பின் நாடார் சமூகத்துக்கு சொல்லற்கரிய தொண்டுகள் பலவும் புரியக் கூடும். அந்தோ! ஓர் சாமி—ஓர் உத்தம தேச—சமூக—சமயாபிமானியைப் பறி கொடுத்து ஆறாத் துயரிலும், தீராச் சோகத்திலும் ஆழ்ந்தோம். ஆனால் இனி நம்மால் ஆவது என்ன? நமது "பால சன்னியாசி" யின் ஆத்மா சாந்தி யடையவும், அன்னவர் குடும்பத்தார் துயர் நீங்கவும், இவர் போன்ற உயரபிமானிகள் மென்மேலும் நாடார் சமூகத்தில் தோன்றவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்போமாக.

ஸி. தங்கையா நாடார்,
தென் திருவிதாங்கூர்.

## ஸ்ரீமான் முதலாளி
## மு. மு. மு. அவர்கள்
## ஞாபகச்சின்ன வாசகசாலை,
## அருப்புக்கோட்டை.

இவ்வாசகசாலையின் நிர்வாகக் கூட்டம் 16—4—28-ல் சாஸ்வத அக்கிராசனர் ஸ்ரீமான் அ. பெ. ரத்தினவேல் நாடார் அவர்கள் தலைமையின் கீழ் கூடி நிர்வாக விஷயமான பல தீர்மானங்கள் நிறைவேற்றியதுடன் கீழ்க் கண்ட முக்கிய தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன.

(1) பொது நல சேவையே நோக்கமாய்க் கொண்டுழைத்த வாலிப திலகம் திருவாளர். திருமேனிநாதர் அவர்களின் அகால மரணத்திற்கு இவ் வாசகசாலை அங்கத்தினர்கள் ஆழ்ந்த அனுதாபப்படுவதுடன் அவரைப் பிரிந்து ஆற்றொண்ணுத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

(2) திருவாளர். திருமேனி நாதர் அவர்கள் திரு உருவப் படத்தை வாசகசாலையின் சார்பில் பெரிதாகச் செய்து வைக்க வேண்டும்.

(3) இந் நகரில் நமது நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாடு சமீபத்தில் நடைபெற விருப்பதால் அதில் நமது வாசகசாலையின் சார்பிலிருந்து பல நடவடிக்கைகளிலும் கலந்து ஒத்துழைக்க வேண்டும்.

பின்னர் காரியதரிசி வந்தனோபசாரம் கூறக் கூட்ட மினிது கலைந்தது என காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## நாடார் இண்டஸ்ட்ரியல் எக்ஸிபிஷன்,
## (கைத் தொழிற் கண் காக்ஷி)
## அருப்புக்கோட்டை.

### மதுரை நாடார் ஊழியப் பிரசார சபை அறிக்கை.

நாளது விபவஞூ ஆனிமீ்த்தில் அருப்புக்கோட்டையில் நடைபெறும் 12வது கான்பரன்ஸ் தினங்களில் நாடார் கைத் தொழில் கண் காக்ஷி நடத்தத் தீர்மானித்துள்ளோம். அவ் வைபவத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சித்திரை மீ 20 வக்குள் தங்கள் பெயர் விலாசங்களையும், காக்ஷிக் கனுப்பும் சாமான் விபரங்களையும் அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காக்ஷிக் கனுப்பும் சாமான்கள் நாடார் குல ஆண்—பெண்களாலும், நாடார் தொழிற் சாலைகளாலும் உற்பத்தி செய்யப் பெற்றவைகளாக இருத்தல் வேண்டும். மற்றும் இதைப் பற்றிய விபரங்கள் அடுத்த அறிக்கையில் வெளி வரும். கைத் தொழி லபிவிருத்தியில் அக்கறையுடைய நாடார் குலத்தின ரனைவரும் இவ் விஷயத்தில் விசேஷ ஊக்கம் காட்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

காரியதரிஸிகள்,
நாடார் ஊழியப் பிரசார சபை,
221. கீழமாரட்டு வீதி,
மதுரை.

## நாடார் தொண்டர் மகாநாடு.

மகாத்மாஜீ அவர்களின் முக்கிய உபதேசமாகிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இவைகளை நிலைநாட்ட வேண்டி ஸ்தாபனமாகியிருக்கும் நாடார் தொண்டர்படையின் முதலாவது மகாநாட்டை வருகிற ஜூலை மாதத்தில் அருப்புக்கோட்டையில் நடைபெறும் நாடார் 12-வது மகாநாட்டின் தினங்கள் மூன்றில் சௌகர்யமான நாளில் அவ்வூர் நமது தேவஸ்தானத்தில்நடத்துவதென்று தீர்மானமாகியிருக்கிறது. என்றும்மேற்படி மகாநாட்டிற்குக்கொண்டுவரும்சகல தீர்மானங்களும் விஷயாலோசனைக் கூட்டத்தில் வைத்துத்தீர்மானிப்பதற்காக 30—6—28க்குள் நாகபட்டணம் "நாடார் தொண்டர் படை" ஆபீசுக்கு அனுப்பிவிட வேணுமென்றும், மகாநாடு நிச்சயமாய்க்கூடும் இடமும், நேரமும் பேப்பர்கள் மூலமாயும், நோட்டீஸ்கள் மூலமாயும் அறிவிக்கப் படுமென்றும்நாடார் தொண்டர் படை சேனாதிபதி எஸ். கே. ராமசாமி நாடார் நாகபட்டணத்திலிருந்து அறிவிக்கிறார்.

## சைக்கிள் பந்தயம்.

என்னுடன் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலிலிருந்து காலை 6 மணிக்கு சைக்கள் ஏறி, சைக்கிளை விட்டுக் கீழே இறங்காமல் அன்று மாலை 5 மணிக்குள் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் குடவறை வாசல் முன்புக்கு வந்து சேர வேண்டியது. இந்தப் பந்தயம் ஜெயிப்பவர்களுக்குப் பணப் பரிசில்லை. வீர தத்துவமே பிரதானமென்று பணப் பரிசு ஒழிக்கப்பட்டிருக்கிறது. நான் தோற்று விட்டால் அக்காலத்தில் தன்னுடன் எதிர்த்துத் தோற்ற புலவர்களை வில்லி புலவர் காதை யறுத் தெடுத்தது போல என் வலது காதை யறுத்து எடுத்து விடலாம். சைக்கிள் ஏறிவரும் போது அகஸ்மாத்தாய் சைக்கிளில் ரிப்பேர் ஏற்பட்டால் அது வகைக்கு நேரம் கொடுக்கலாம். சம்மதமுள்ளவர் பந்தயத்திற்கு வரலாம். எனது விலாசம் கீழே காண்க.

ஆர். பெருமாள் நாயுடு,
ஷாப் வியாபாரம், தச்சநல்லூர்,
திருநெல்வேலி ஜில்லா.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

சேதமிலாதி யேபொருட்கு செல்லிட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வேலியையனதமிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

விபவ ஸு சித்திரை மீ ௰௧ உ

## கவனிக்கவேண்டும்.

வானவிற் போல் பல வர்ணங்களுடன் அழகாய்த் தோன்றி மறைந்த சுயராஜ்யக் கட்சியார் கட்டிய பொய்க் கோட்டைக்குள்ளே ஜஸ்டிஸ்கட்சி அகப்பட்டுக்கொண்டு சாகுந் தருவாயிலிருக்கும்போது வைக்கம் வீரர் திரு. நாயக்கர்

> உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
> யிடுக்கண் களை வதா நட்பு

என்னு முதுமொழிக்கேற்ப ஆபத்பாந்தவனாய் சுயராஜ்யக் கட்சியின் மாயக்கோட்டைகளைத் தகர்த்து ஜஸ்டிஸ் கட்சிக்கும் புத்துயி ரளித்தாரென்று முன் பன்முறை பகர்ந்திருக்கின்றோம். திரு. நாயக்கருடைய உள்ளுணர்ச்சியினாலும், சலியா முயற்சியினாலும், மாசற்ற மனதினாலும் தமிழ் நாட்டு மக்கள் முழுமனதையும் கவர்ந்து ஜஸ்டிஸ் கட்சியை மலை மேலேற்றிய தீபம் போல் வைத்தார் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஜஸ்டிஸ் பத்திரிகை தலைவர்கள் உறக்கம் என்று தலைப்பிட்டு திரு. நாயக்கரைப்பற்றிப் போற்றின பொன்னுரைகளை அப்படியே மற்றொரு பக்கத்திற் பிரசுரித்திருக்கிறோம். அவ்வின்னுரைகளை எல்லாத் தமிழ் மக்களும் நன்கு கவனிக்க வேண்டும். சுயராஜ்யக்கட்சி தோல்வியடைந்து வருவதற்கும் ஜஸ்டிஸ் கட்சி உச்சஸ்தானம் பெற்று வருவதற்கும்

> இளைப்புச்சலிப்பில்லாமல் பிரசாரஞ்செய்துவரும் மாபெரும் தேசாபிமானியாகிய திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்கள் வேலையே

என்று குறிப்பிட் டிருப்பதையும்

> வடபாகத்தில் தக்க பிரசாரமும்,தலைவர்களும் இல்லை என்றும், ஜஸ்டிஸ்கட்சி இப்போது இவ்வளவு வல்லமையுள்ள நிலைமைக்கு வந்ததற்கு மயது எதிரிகளின் தவறுகளும் முட்டாள்த்தனங்களும் காரணமேயன்றி நமது சொந்த முயற்சி காரணமல்லவென்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்

என்று நமது தலைவர்கள் உறக்கத்தைப்பற்றிக் கூறியிருப்பதையும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். ஜஸ்டிஸ் கட்சி பொதுஜன மதிப்பில் உயர்ந்த ஸ்தானத்தில் நிற்பதற்கு அக்கட்சியின் நடவடிக்கைகள் சுத்தமாகவும், நிர்மல மாகவும் இருக்கின்றனவென்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் சிறிதேனும் தவறுகளுமிருக்கத்தான் வேண்டும். ஸர். சிவஞானம் பிள்ளை தம் ஜில்லாவில் தேர்தலில் தோல்வியுற்றதற்குக் காரணம் தவறுதலில்லாதிருக்க முடியுமா? ஒரு கட்சிப்பலத்தினால் ஒரு ஸ்தானத்தை அடைந்த எவரும் அக்கட்சி நலத்தைக் கருதாமலும், அப்பலத்தை மதியாமலும் தாமும் தம் பந்துக்களும்தான் உலகமாகுமென்று குறுகியவழி சென்றால் அபாயமான இடத்திற் கொண்டுபோய்த்தான் சேர்க்குமென்பதைத் தேர்தலுக்குப் பிறகுதான் ஜஸ்டிஸ் தலைவர்கள் உணர்ந்திருக்கக்கூடும். தாங்களுணர்ந்ததை சுயராஜ்யக் கட்சிக்கு இப்போது போதிக்கின்றார்கள். சுயராஜ்யக் கட்சியார் ஜஸ்டிஸ் கட்சியாரெல்லாரும் நல்லவர்கள்தானு வென்று கேட்டுக்கொண்டிராமல் தங்கள் முட்டாள்த்தனத்துக்கு வருந்தி ஜஸ்டிஸ் உபதேசத்தைச் சரியாய்க் கவனிக்கவேண்டும். ஜஸ்டிஸ்கட்சியாரும் "ஜஸ்டிஸ்" கூறியிருப்பதை முற்று முணர்ந்து தலைவர்கள் உத்தியோக மோகத்தை ஒருவாறு விட்டு, கட்சி நலத்துக்கும், மக்கள் முன்னேற்றத்துக்கும் தங்கள் வாழ் நாட்களைத் தியாகம் செய்ய வேண்டும். திரு. நாயக்கர் ஒருவருடைய முயற்சியால் ஒரு கட்சி புத்துயிர் பெற்றதென்பதற்கு அவருடைய உள்ளுணர்ச்சியும், நிரிக்ரஹ சத்தியுமென்பதை ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்கள் ஒரு பாடமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஜனங்களை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் முடிவில் ஏமாறிப் பொதுஜன மதிப்பில் விலக்கப்பட்டவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் போவார்களென்பதை சுயராஜ்யக் கட்சித் தோல்வியினாலாவது உணர வேண்டும். அதற்கு சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் ஆகாரமின்றி அலைந்து திரிவதே போதிய சான்றும்.

திரு. நாயக்கரவர்கள் 8-4-28 "குடியரசு" தலையங்கத்திலும், அதற்கு முன் பல தடவைகளிலும் குறிப்பிட்டெழுதி வந்திருக்கிற சில முக்கியமான விஷயங்களை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். அதாவது:—

> பார்ப்பனர் கையிலிருக்கும் உத்தியோகங்களையும், பதவிகளையும் பிடுங்கிப் பார்ப்பனரல்லாத ஜமீன்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும், லேவாதேவிக்காரர்களுக்கும், ஆங்கிலம் கற்ற வக்கீல்களுக்கும் கொடுப்பதற்காக என்று நினைப்பார்களானால், அவர்கள் கண்டிப்பாய் ஏமாறிப் போவார்கள். ஏனெனில் அரசியல் விஷயத்தில் பார்ப்பனர், பணக்கார வக்கீல்கள் ஆகியவர்கள் ஆதிக்கத்தை விட வெள்ளைக்காரர் ஆதிக்கமே ஒடுக்கப்பட்டவர்களுக்கும், ஏழை மக்களுக்கும் குடியானவர்களுக்கும்,யோக்கியர்களுக்கும் அதிகமான கெடுதியில்லாததென்பதே நமதபிப்பிராயம். வெள்ளைக்காரர் ஆதிக்கம் ஒழிவதாயிருந்தால் நேரே அது ஏழை மக்களான தொழிலாளர் கைக்குவருவதுதான் நன்மையே அல்லாமல், ஏழைமக்களுக்கு பார்ப்பனர்களும், பணக்காரர்களும், வக்கீல்களும் தர்ம கர்த்தாக்களாகவும், தாதர்களாகவும் இருக்ககூடாதென்றே சொல்லுவோம். இந்தக் கொள்கையின் பேரில்தான் பணக்காரர்கள் பத்திரிகைக்கு உதவிசெய்ய வேண்டும்.
>
> அதுபோலவே மத இயலில் நமக்கு உதவிசெய்பவர்களும் இந்து மதம் என்பதான பார்ப்பன மதத்துடன் போர் புரிந்து வெற்றி யேற்படுமானால், சைவம், வைணவம், கிறிஸ்தவம், முகம்மது மாத்துவம் ஆகிய தம் தம் சமயங்களுக்கு அனுகூலமாகுமென்று நினைத்துக்கொள்வார்களானால் அவர்களும் ஏமாற்ற மடைவார்கள் என்பதையும் இப்போதேசொல்லிவிடுகிறோம். பார்ப்பன மதம் ஒழிவதானால் உண்மையான சமரசமும் சன்மார்க்கமும் உடையதான மதம் ஏற்படவேண்டும்

என்பதாக வெளியிட்டிருப்பதை நன்கு கவனிக்கவேண்டும். ஏனெனில் புதிய சீர்திருத்தச் சுதந்திர ஸ்தாபனங்களாகிய சட்டசபை, தேவஸ்தானக்கமிட்டி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்துக் கோர்ட்டு முதலான பல வினங்களிற் சிலவிடங்களிற் செய்யும் சூட்சிகளால் நடக்கும் கொடுமைகளும், அக்கிரமங்களும் ஏழை மக்களுக்கு மகா கஷ்டத்தையுண்டுபண்ணுகிறது. இதனால் சுயராஜ்யமே வேண்டாம்; வெள்ளைய ராட்சியே வேண்டும் என்று சாதாரண ஜனங்கள் எண்ணுகிறார்கள். மதத்தின் பேராலும் ஜாதிக்கர்வத்தினாலும் பார்ப்பனர்களைப் பார்க்கிலும் பார்ப்பனரல்லாத சில வகுப்பினர் செய்யும் கொடுமை அதிகமாயுள்ளதென்பதை நாம் பன்முறை கூறிவருகிறோம். திருநெல்வேலி ஜில்லாவில் வேளாளர்கள் பல வகுப்பினரைப் பல விதமான கொடுமைகளுக்குள்ளாக்கிவருகின்றார்கள். சில விடங்களில்நாயக்கமார்களும் ராஜாக்களும் "மண்ணையாண்டவர் மண்ணிலுங் கோடியுண் டின்னும் ஆள்பவர் எத்தனைகோடியோ" என்று தாயுமானவர் சொல்லியிருப்பதறியாமல் எங்கேயோ எப்பொழுதோ தாங்கள் ஆட்சி புரிந்ததாக வெண்ணிக் கொண்டு மற்றவர்கள் செருப்புப் போடக்கூடாது; குடை பிடிக்கக் கூடாது; அங்க வஸ்திர மணியக் கூடாது; பல்லக்கேறக்கூடாது என்று பல நிர்ப்பந்தங்கள் செய்கிறார்களென்றும், இதனால் கலகமும், கொள்ளையும், கொலையுங்கூட நடந்து கோர்ட்டில் பணத்தைச் செலவு செய்து ஓட்டாண்டியானார்களென்றும், பலர் இக்கொடுமைகள் சகிக்கமுடியாமல் கிறிஸ்தவ மதத்திற் சேர்ந்துவிட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. சில ஜமீன் கிராமங்களிலும் இக்கொடுமைகள் இருந்தே வருகின்றன. இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இவ்விதக் கொடுமைகள் நடப்பதாயிருந்தால் மிஸ். மேயோ எழுதியதில் என்ன குற்றமென்று கேட்கின்றோம். சுயமரியாதை இயக்கமானது மதுரை ஜில்லாவின் வடபாகத்தை விட்டு இருள்சூழ்ந்த தென் மூன்று ஜில்லாக்களில் இன்னும் சரியானபடி ஊடுருவிப்பாயவில்லை யென்பதைத் திரு. நாயக்கரவர்களும் அவரது வடஜில்லாச் சிஷ்ய கோஷ்டிகளும் சரியாய்க் கவனிக்கவேண்டும். ஒரு கட்சியானது புதிய சக்தியைப் பெற வேண்டுமானால் அச்சக்தியைச் சாதாரண ஜனங்களிடமிருந்து பெறல் வேண்டும்; பெற்ற பின்னும் அவர்களை அது தொட்டுக்கொண்டே நிற்கவும் வேண்டும்; அத்தொடர்பு என்று நீங்குமோ அன்றே அச்சக்தியும் நீங்கித் தனியாய்த் தள்ளாடி விழுந்துபோகும் என்று லார்டு கிளாட்ஸன் ஒரு சமயம் கூறியிருப்பதை ஜஸ்டிஸ் தலைவர்களும் சரியாகக் கவனிக்க வேண்டும்.

பார்ப்பனர்களிடமிருக்கும் அதிகாரமும் உண்மையான மதமும் ஒருக்கால் அவர்களை விட்டு விலகி கால்—அரை—முக்கால்ப் பிராமணர்களாகிவிட்டோமென முழு மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் ஒரு சார்பார் பால் போய்ச் சேருமானால் அது ஏழைமக்களுக்கு இடுப்புவலி போய் வயிற்று வலி வந்தது போலாகுமென்பதை எல்லாத் தலைவர்களும் நன்கு கவனிக்க வேண்டும்.

---

## ஸ்ரீ தாதர் விநாயகர் கோவில்.

மதுரைக்கருகே அழகர் கோவில் ரஸ்தாவிலுள்ள அப்பன் திருப்பதிக்குப் பக்கத்திலிருக்குந்தம்சிங்காரச் சோலையில் எனது பாட்டனார் தாதர் ஸ்ரீமான் பெரியசாமி நாடாரவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று க்ஷீண தசையடைந்திருந்த ஸ்ரீ தாதர் விநாயகர் கோவிலை யான் புதுப்பித்து, ஈசன் படைப்பில் எல்லாமக்களும் சமம் என்ற முறையில் சகலத்திராளும் தொழுது கொள்ளும் சுதந்திரத்துடன் நிர்மாணித்திருக்கிறேன். ஆகையால் பக்த குழாங்கள் சாதி பேதம் எதுமின்றி தெரிசனம் செய்து போகும்படி விரும்பி யழைக்கிறேன்.

பெ. சு. பெரியசாமிநாடார்,
மதுரை.

---

## திருமண நன்கொடை.

நமது குலாபிமானியும், பொதுஜன உபகாரியும், தூத்துக்குடி டிவிஷன் கௌரவ பஞ்சாயத் ஆர்கனைஸருமான கச்சினாவிளை ஸ்ரீமான் க. பி. கெங்கை ஆதித்தநாடாரவர்கள், தமது கனிஷ்ட புத்திரர் ஸ்ரீ மகராஜ நாடாருக்கும், நடுவக்குறிச்சி ஸ்ரீமான் பி. ராமசாமி நாடாரவர்களின்புத்திரிசௌபாக்கியவதி சுப்புலஷ்மியம்மாளுக்கும் காளது சித்திரை மீ 17உ யில் நடைபெறவிருக்கும் திருமண சுபகாரியத்தை முன்னிட்டு நம் மித்திரனுக்கு அன்பு கூர்ந்தனுப்பி வைத்த நன்கொடை ரூ 1—0—0 சந்தோஷமாய்க் கிடைக்கப்பெற்று எமது வந்தனத்தைச் செலுத்துகிறோம். தம்பதிகள் சகல பாக்கியங்களும் பெற்று இலங்க இறைவனருள்வாராக.

---

## பிழை திருத்தம்.

16-4-28ல் வெளியான நம் மித்திரனின் 6-வது பக்கத்தில் "போடி நாயக்கனூர் முனிஸிபல் சேர்மன் ராஜினாமாவும் தெரிந்தெடுப்பும்" என்ற தலைப்பின் கீழ் உள்ள விஷயத்தில் 2-வது பாரா. 2-வது வரியில் நாயக்கர் அவர்கள் என்பதற்குப் பதிலாக மகா கோத்ரம் வாய்ந்த ஜமீன்தார் அவர்கள் என்று திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## உள்ளூர் விஷயங்கள்.

### நாடார் மகாஜன 12-வது மகாநாடு.

இவ்வூர் நாடார் பெருமக்கள் வரும் ஆனி மாதக் கடைசியில் நடத்திவைக்க விருக்கும் நாடார் மகாஜன 12-வது மகாநாட்டுக்கு 15—4—28 மாலை 8 மணிக்கு நாடார் ஹைஸ்கூலில் ஓர் கூட்டம் கூடி உபசரணைக் கமிட்டி நியமனமாகி யிருக்கிறது.

ஃ ஃ

### சாலியர் மகாஜன 1-வது மகாநாடு.

சாலியர் மகாஜன 1—வது மகாநாடு நிகழும் எப்ரல் மீ 29, 30 உ களில் நாகர்கோவில் ஸ்ரீமான் வ. நாயலுரவர்களின் தலைமையின் கீழ் நடைபெற விருக்கின்றது. அதற்கான வேலைகள் அதி துரிதமாய் நடைபெற்று வருகின்றன.

ஃ ஃ

### யூனியன் போர்டு பிரசிடெண்டு தேர்தல்.

14—4—28-ந் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு போர்டு கட்டடத்தில் பிரசிடெண்டு தேர்தல் மீட்டிங்கு கூடியது. அது காலை இவ்வூர் பிரபல ஜவுளி வியாபாரியும், ஸ்ரீ சௌடாம்பிகா வாசக சாலையின் காரியதரிசியும், தேவாங்கர் குலத்துக்கு ஓர் திலகம் போன்றவருமான ஸ்ரீ. பி. ராம. சொக்கப்ப செட்டியாரவர்கள் குமாரர் ஸ்ரீ. இராமசாமி செட்டியாரவர்கள் போட்டி யன்னியில்பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவருடைய பெருந் தகைமைக்கும், உதார குணத்திற்கும் தக்கவாறு போட்டியன்னியில் இவருக்கு இப் பதவி கிடைத்ததைப் பற்றி நகர் வாசிகள் அனைவரும் அளவிலா ஆநந்தம் எய்தி கூட்டம் கூட்டமாக வந்து புதிய பிரசிடெண்டவர்களை வாழ்த்தி சந்தனம், புஷ்பம், வெற்றிலை பாக்குப் பெற்றுத் திரும்பினர். இவர் பிரசிடெண்டாக வந்த முகூர்த்தத்தால் நகரில் சுகாதாரம் நன்கு கவனிக்கப்படும் என மகாஜனங்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஃ ஃ

### தாலுகா போர்டு மெம்பர் தேர்தல்.

இராமநாதபுரம் தாலுகா போர்டின் அருப்புக்கோட்டை பிர்க்கா மெம்பர் ஸ்தானங்களுக்கு இவ்வூர் யூனியன் போர்டு மாஜி பிரஸிடெண்ட் ஸ்ரீமான் வெ. ச. கோவிந்தப்ப நாயக்கரவர்களும், ஸ்ரீமான் குருவப்ப நாயக்கரவர்களும், திருச்சுளி ஸ்ரீமான் வீரபத்திர பிள்ளையவர்களும் யாதொரு போட்டியுமன்னியில் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

ஃ ஃ

### சுழிக்காற்றும், சிறு மழையும்.

20—4—28-ல் இரவு சுமார் 8 மணிக்கு மின் வெட்டுகளுடன் கருமேகந் திரண்டு நாலு பக்கமும் சூழ்ந்து நின்றது. ஜனங்கள் கன மழை பெய்யுமென எதிர் பார்த்திருக்கையில் வடதிசையிலிருந்து சண்ட மாருத மெனப் பேரிரைச்சலுடன் பெரும் சுழிக்காற்று வந் தடித்தது. காற்றின் ஆக்ரோஷம் சுமார் 1 மணி நேரம் வரையில் தணிந்தபாடில்லா திருந்தது. எங்கும் புழுதிக் காடாகி ஜனங்கள் அல்லோல கல்லோலப் பட்டு பயப்பிராந்தி யடைந்தார்கள். பின் சிறிது மழை பெய்து காற்றடிப்பு நிற்க ஜனங்கள் தைரியங் கொண்டார்கள். பெருஞ் சேத மொன்றும் விளையவில்லை.

ஃ ஃ

### சரபம். முத்துச்சாமிக் கவிராயரவர்கள் குரு பூஜை.

காலஞ் சென்ற சரப கவி. உடுமலைப் பேட்டை ஸ்ரீமான் முத்துச்சாமிக் கவிராயரவர்களுக்கு அன்னவர் பக்த சிஷரும், நம் மித்திர னதிபருமான ஸ்ரீமான் ரு. ஆ. முத்து நாடாரவர்களால் 22—4—28-ல் பஜனை மடாலயத்தில் குரு பூஜை வழக்கம் போல் விமரிசையாய் நடத்தப் பெற்றது.

## திருச்சுழிகை, இந்து நாடார் க்ஷத்திரிய வித்தியாசாலை.

### முதலாண்டு நிறைவுவிழா.

19—4—28 அன்று காலை 11-மணிக்கு இராமநாதபுரம் ஜில்லா கல்வி இலாக்காத் தலைவர் திருவாளர். டி. பி. கிருஷ்ணஸ்வாமி முதலியார் எம். ஏ. பி. யல். அவர்களின் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பித்தது. அது சமயம் இந்நகர் உத்தியோகஸ்தர்கள் பலரும் மற்றும் அருப்புக்கோட்டை, கல்லூருணி, இலுப்பையூர் முதலிய வூர்களிலிருந்தும் இவ்வூரிலிருந்தும்பல பிரமுகர்களு விஜயம் செய்திருந்தார்கள். ஆரம்பத்தில் மாணவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டதும் ஷை ஸ்கூல் மானேஜர் திருவாளர். கே. முத்துநாடார் அவர்களால் அக்கிராசனாதிபதியவர்களுக்கு வரவேற்புப்பத்திரமும்,பள்ளிக்கூடத்து வருஷாந்திர ரிப்போர்ட்டும் படிக்கப் பட்டுப்பின்மாணவர்களால் தேவாரம், திருப்புகழ் முதலிய தமிழ் பாட்டுகளும் ஆங்கிலத்தில் சில செய்யுள்களும் பாடப்பட்டன. பின் மாணவர்களால் பல நீதிகளை யுணர்த்தும் சம்பாஷணைகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் ஷைஸ்கூல்ஹெட்மாஸ்டர் திருவாளர். ஏ. கே. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் "தமிழின் அருமை" என்பதுபற்றி வெகு விரிவாகவும், பல மேற் கோள்களுடனும் யாவரும் போற்றும்படியாகப் பேசப்பட்டது. அதன் பிறகு விளையாட்டு, சம்பாஷணை முதலியவைகளில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு மானேஜ்மெண்டாரால் பல பரிசுகளும், விஜயம் செய்திருந்த கனவான்களால் நன்கொடைகளும் வழங்கப்பட்டன. அதன் பின் அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரையில் ஷை பள்ளிக்கூடம் அபிவிர்த்தியடைவதற்கான பல அரிய யோசனைகளையும், தமிழ் பாஷை தற்காலமிருக்கும் நிலைமையைப்பற்றி வருந்தி அதன் பரிதாபகரமான நிலைமையைப் போக்குவதற்குப் பள்ளிக்கூடங்களில் உயர்தர மாணவர்களுக்குத் தமிழ் பாஷையிலேயே எல்லாப்பாடங்களும் கற்பிக்க வேண்டியதின் அவசியத்தையும், புத்தகசாலைகளின் பிரயோஜனத்தையும் விளங்கக் கூறினார்கள். பிறகு வந்தனோபசாரங் கூறப்பட்டு அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மற்றும் பிரமுகர்களுக்கும் புஷ்பஹாரம் சூட்டப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

இடை வேளைப் போஜனத்திற்குப் பிறகு மாலை 4 மணிக்குஷைகிருஷ்ணஸ்வாமி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ், ஷை வித்தியாசாலையிலுள்ள "ஜெயராம்" சாரணப்படையின் முதலாவது வருஷாந்திரவிழா ஆரம்பிக்கப்பட்டது. கடவுள் வணக்கம் பாடியபின் ஷை படையின் அதிகாரியும் (ஸ்கவுட் மாஸ்டரும்) காரியதரிசியுமாகியதிருவாளர். டி. என். பூமிநாதய்யர் அவர்களால் வருஷாந்திர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. பிறகு ஷை படையைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் படை செய்யவேண்டிய வேலைகளைப்பற்றிய சம்பாஷணைகள் செய்து, பாடல்கள் பாடி, பல அபூர்வமான வேலைகளும் செய்து காண்பித்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரையில் சாரணப்படை விஷயமாய் தனக்குள்ள அனுபோகத்தையும், அது 1908-ம் ௵ ஸர். ராபர்ட் பேடன்பவல் என்ற ஆங்கில வீரரால் ஆரம்பிக்கப்பட்ட விபரத்தையும், அதனால் ஜனங்களுக்கு ஏற்பட்டு வரும்எண்ணிறந்த நன்மைகளையும் விஸ்தாரமாய்க் கூறினார்கள். அதன் பிறகு இந்தச் சாரணர்படையின் தலைவர்களான திருவாளர்கள். கே. முத்து நாடார், ஏ. கே. சுப்பிரமணிய அய்யர் ஆகியவர்களால் வந்தனோபசாரங்கூறப்பட்டு அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மற்றும் பிரமுகர்களுக்கும் புஷ்பஹாரம் சூட்டப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

மறுநாள் காலை கனம் கல்வியிலாகத் தலைவரவர்கள் தலைமையின் கீழ் ஷை வித்தியாசாலை மாணவர் அபிவிருத்தி சங்க 2-வது வருடப்பூர்த்திவிழா அதி விமரிசையுடன் இனிது நடை பெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## செய்தித்திரட்டு.

காஞ்சீபுரத்தில் ஒரு சிறிய மாட்டு இடையன் மாடுகளை மேய்த்து விட்டுத் திரும்பி வருகையில் இடி விழுந்து இறந்து விட்டானாம்.

* *

மதுரை இராமநாதபுரம் பார்ப்பன ரல்லாதார் வாலிப சங்கத்தின் மகாநாடு மதுரையில் மே மாதம் 19, 20உ களில் சென்னைகார்ப்பொரேஷன் அங்கத்தினர் இராவ்பகதூர் டாக்டர். வி. நடேசமுதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

* *

இங்கிலாந்து முழுவதும் குளிர் வெகு கடுமையாக விருக்கிறது.

* *

பம்பாயில் 32000 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

* *

மதுரையில் நாயுடு வகுப்பைச்சேர்ந்த ஓர் பெண் க்ஷய வியாதியால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து பின் வீட்டுக்குக் கொண்டுவந்ததும் உயிர் போயிற்று. பின்னர், உற்றார், பெற்றார், உறவினர்கள் அழுது கொண்டிருக்கும் சமயம், ஒருவர் வந்து சில மருந்து கொடுத்தவுடன் மறுபடியும் உயிர் பெற்றனள்.

* *

லண்டனில் ஒரு கைதி சிறையிலிருந்து தாலேணியின் துணை கொண்டிறங்கி ஓடி ஓர் பாதிரி வீட்டில் நுழைந்து அவரது உடைகளை அணிந்து கொண்டு காரை எடுத்துக்கொண்டு ஓடினனும். அடையாளம் கண்டு போலீஸார் கைது செய்தனராம்.

* *

ஆஸ்டுனு என்ற விடத்தில் ஒரு வீட்டில் விவாகத்தன்று தீப் பற்றியதால் மண மகன், மணமகள் உள்பட 13 பேர் இறந்தனராம்.

* *

கொல்லம் லயனில், கிருஷ்ணன் என்ற மாணக்கனால் ரயில் விபத்து தவிர்க்கப்பட்டது. இராவில் பாதையில் ஒரு மரம் விழுந்து கிடந்தது. அது கண்ட மாணக்கன் தன்னகையில் வைத்திருந்த பேட்ரி லைட்டால் வண்டியின் டிரைவருக்கு வெளிச்சம் காண்பித்து நன்மை செய்தானென அவனுக்கு வெகுமதி கொடுப்பார்களாம்.

* *

நமது மன்னர் பிரானுக்கு ஆப்கன் சங்கத்தினர் அமீர் சார்பாக அருமையான 3 பாரஸீக புத்தகங்கள் நன்கொடையாக அளித்திருக்கின்றனர். அவைகளில் ஒன்று 200 வருடங்களுக்கு மூன் 50 பக்கங்களுடன் 5 வருஷகால வளவில் கூரிய நகத்தால் பால் காகிதத்தில் எழுதப் பெற்றது. 2-வது புஸ்தகம் குதிரை வளர்ப்பு பற்றி பொன்னினுல் எழுதப்பட்டது. 3-வது புஸ்தகமும் பொன்னெழுத்துக்களாலேயே முகமதியர் தொழுகையைக் குறித்து எழுதப்பட்டது.

* *

பாலலி எனும் பெயருள்ள 15-வயது டேனிஷ் பையன் 44 தினங்களில் உலகத்தைச்சுற்றி வந்திருக்கிறான். இவன் கோபன்ஹேகனி லிருந்து சென்ற மார்ச்சுமீ 2உ புறப்பட்டு நிகழும் எப்பிரல்மீ 13உ மாலையில் திரும்பி வந்து சேர்ந்தான். வெகு உற்சாகமாக ஜனங்கள் வரவேற்றார்கள்.

* *

கல்கத்தா ஹௌராத் தோட்டிகள் வேலை நிறுத்தம் தீர்ந்தது. ஜூன்மீ முதல் ஒவ்வொருவருக்கும் 8 அணு சம்பள உயர்வு உண்டென்றும், வேலை நிறுத்த காலத்திற்குப் பூராச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் முடிவாகி விட்டது.

* *

மைசூரில் ஒரு வியாபார ஸ்தலத்தில் நெருப்புப்பற்றி சுமார் 20 லக்ஷ ரூபாய் நஷ்டமுண்டாக்கியது.

* *

சென்னை முருகேச முதலியார் என்பார் கனம். பனகால் ராஜாவை வயிர நகை விற்பனை விஷயமாய் மோசஞ் செய்து விட்டதாக கனம். பனகால் ராஜா தொடுத்திருந்த வழக்கு எழும்பூர் பிரதம மாஜிஸ்ட்ரேட்டால் விசாரிக்கப்பட்டதில் மோசடி யாதுமில்லை யெனத் தள்ளுபடியானது.

* *

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சுமார் 15-வயதுள்ள பையனொருவன் மின்சார எற்றத்தில் எப்படியோ சிக்கிக்கொண்டு கூச்சலிட்டான். ஆஸ்பத்திரியில் உள்ளோர் ஓடி அவனை அதினின்றும் விடுவித்து சிகிச்சை செய்தும் முடிவில் ஆவி முடிந்தே போனன்.

* *

பாரிஸ் நகரத்திலிருந்து லண்டனுக்கு அனுப்பிய 50,000 பொன்கள் மதிப்புள்ள முத்துமாலையை எமிலி ஸாவராக் எனும் தபால் உத்தியோகஸ்தர் ஒருவர் திருடிவிட்டதாகப் பாரிஸ் போலீஸார் கைது செய்திருக்கின்றனர். கைதியானவர் தான் திருடிப் புதைத்து வைத்திருப்பதாகக் கூறினாராம்.

* *

நாங்குநேரித் தாலுகா களக்காடு எனும் ஊரில் ஒரு புலி வந்து அங்குள்ள ஒரு வாழைத்தோப்பில் ஒளிந்திருந்தது. இது விஷயம் போலீசாருக்கு அறிவிக்க ஹெட் கான்ஸ் டேபிள் ஸ்ரீ சண்முகம் பிள்ளையும், பல போலீஸார்களும் துப்பாக்கி சகிதம் வந்து புலியைத் தேடினர்கள், புலி சரேலென ஹெட்கான்ஸ்டேபிள் மீது பாய்ந்து அவருடன் சமர் புரிய ஒரு கான்ஸ்டேபிள் அதைச் சுடக் குறி வைத்துத் தவறுதலாக ஹெட்கான்ஸ்டேபிளைச் சுட்டு விட்டார். ஹெட்கான்ஸ்டேபிள் கீழே விழுந்து உயிர் துறந்தார். புலி ஓடிவிட்டது.

* *

நியூயார்க் உயர்தர நீதிஸ்தலத்து நீதிபதிகளிலொருவராயிருக்கும் ஸ்ரீ காவன்ஞ என்பவர் அமெரிக்காவில் கொலையையே தொழிலாகக் கொண்டவர்கள் 350,000 பேர்களிருக்கின்றனரென்றும், சென்ற 1927-ம் வருடத்தில் மட்டும் 12,000 கொலைகள் நடந்திருக்கின்றன வென்றும் சொல்லியிருக்கிறார்.

* *

சென்னை—பெரம்பூரில் தங்கவேலு செட்டியார் என்ற ஒரு வாணியர் தனது காளையை செக்கில் பூட்டப்பட்டிருக்கும் போதும், அன்று மாலையிலும் பலமாக அடித்ததற்காக அக்காளை மிகக் கோபங்கொண்டிருந்து அச்செட்டியார் அதற்குத் தீனி கலந்து கொண்டிருக்கையில் அது அவரைக் கொம்பினுல் குத்திக்கொன்று விட்டது.

* *

பர்மா ரயில்வே, இந்திய அரசாங்கத்தார் கைவசம் வந்தபோதுஷை ரயில்வே காரியதரிசியாக விருந்த 62 வயதுள்ள பிரடெரிக் பிராங்க்ஸ் என்ற ஆங்கிலர் கட்டாயத்தின் பேரில் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு லண்டன் போய் வேலையில்லாத் திண்டாட்டத்தால் ரயில் தண்டவாளத்தில் படுத்து வண்டியில் நசுக்கப்பட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

* *

ராசிபுரத்தில் இரவு 10 மணி முதல் 12½ மணி வரை இடி, மின்னல், காற்றுகளுடன் அகோர மழை பெய்ய சுமார் 2000 காக்கைகள் இறந்து போயின. அனேக மரங்கள் சாய்ந்தன. அனேகர் வெகு கஷ்டப்பட்டனர்.

* *

பவானித்தாலுகாவிலுள்ள தவிட்டுப் பாளைய மென்கிற கிராமத்தில் ஒரு தென்னை மரத்தில் இடி விழுந்து அது நெருப்புப்பற்றி பக்கத்திலுள்ள சாலையில் பற்ற அது எரிந்து அதற்குப் பக்கங்களிலுள்ள வீடுகளிலும் தீப்பற்ற சுமார் 90 வீடுகள் வரையும் தீக்கிரையாயின. வீடுகள் இழந்த ஏழை மக்கள் தவிக்கின்றனர்.

* *

தாட்பல்லபுரி எனும் ஊரில் ஒரு குடிசையில் தீப்பற்றி யெரிந்து கொண்டிருக்கையில் வெளியில் விளையாடிக் கொண்டிருந்த அக்குடிசைப்பெண்சுமார் 6 வயதுடையவள் உள்ளே ஓடி 8 வயதுள்ள தன் சகோதரனையும், 6 மாதக் குழந்தை யொன்றையும் மீட்டினள். இவள் தேகம் முழுதும் எரிந்து புண்ணாகி ரோட்டில் வந்து விழுந்தாள். பின் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையிலிருந்து சுகமெய்தி வருகிறாள். இவள் தீரத்திற்கு 5 ஏக்கர் நிலமும், சில சன்மானங்களும் டெபுடி கமிஷனுல் பரிசளிக்கப் பட்டாள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கலியின் வலியும் இளைஞரின் எழுச்சியும்.

செந்தமிழ் நாட்டின் கண்ணே, பன்னெடு நாட்களுக்கு முன்னர் நம் சமூகமான்து முன்னேற்றமின்றி, பகைவர்களால் துன்புறுத்தப்பட்டு, இழிதொழிலைப் பெற்று, கஷ்டத்துடன் தனது வாழ்வை நடாத்தினது எனப் பகர்வது மிகையாகாது.

பகவானது அருட் பெருங்கருணையாலும், செந்தமிழ்த் தாயின் திருவருளாலும், நம் பெரியோர்களின் நன் முயற்சியாலும் நாளடைவில் சிறிது துன்பமற்று, இன்பமுற்று, தாய்ச் சங்கத்தைப்பெற்று, வளர்பிறைச் சந்திரன் போல் பிரகாசிக்கின்றதெனினும் நம் முன் பதவி வேட்டைப் பிசாசு புகுந்து, ஒற்றுமைக் கோட்டையைத் தகர்த்து, பகைமையைப்புகுத்தி, கர்வத்தைத் தொகுத்து நர்த்தனம் புரிகின்றது. இதுமட்டிலுமா? சங்கத்தைப் பங்கப்படுத்துகிறது. தலைக்கட்டுவரியைத் தடைப்படுத்தி வைக்கிறது. ஐக்கியத்தை அறுத்தெறிகின்றது. முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுகின்றது. கைதம்தாழிலைக் கைவைத்தழித்திக்கொள்கிறது. நிற்க, ஆலயங்களிலும், ஆதித்திராவிடர்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டுமெனப் பகர் வஸ்தக்கேட்டுக் கோபமுற்று, ஒலமிட்டு, குலப்பங்கம் நேர்ந்ததென்றும், சுயமரியாதைப் பங்கம் நேர்ந்ததென்றும் மாரடிப்பதுடன் முன்னே உள்ள முனியன் இறங்கினலன்றி பின்னேயுள்ள சனியன் விலகமாட்டேனென்கிறது.

சகோதரர்களே! கலியன் நம்மை வருத்துவதற்கு நம் முன் பதவி வேட்டையும், கோடரிக்காம்புகளும், வைதீகமும் காரணமன்றி வேறு காரணம் உண்டோ? முனிசிப்பல் சபை, சட்ட சபை முதலியவற்றில் சுய நலத்திற்கன்றி, பிற நலத்திற்கு வழியில்லை என அறிந்தும் பதவி வேட்டை படுகுழியல்லவெனப் பகர இடமுண்டா? அன்றியும் ஆதித்திராவிடர்களுக்குச் சமத்துவம் அளிக்கும் கோப்பி நாயக்கன்பட்டி க்ஷத்திரிய நாடார்களுக்கு மதிப்பு இல்லையா? சுயமரியாதை போய்விட்டதா? ஏனையோர் என்னஞ்செய்கின்றார்களா? இல்லையே. பின்னர் கலியன் ஏன் முனிகின்றான்? அவனுக்கு உதவி செய்யும் கோடரிக்காம்புகளினலன்றோ?

நண்பர் மீ. சி. சுந்தரநாடார் சென்ற 16—4—28 மித்திரனில் வரைந்தபடி பாண்டிய நாட்டில் நமக்குச் சமத்துவம் கொடுக்க மறுக்கும் ஆலயங்களில் சமத்துவத்திற்கு வாதாட உரிமை இருப்பது போல் நம் ஆலயங்களிலும், பள்ளிகளிலும், ஆதித்திராவிடருக்குச் சமத்துவம் அளிக்க வேண்டுமன்றோ? மற்றவர்க்குச் சமத்துவம் அளிக்காத எவனும் சமத்துவத்திற்கு அருகனல்லன் எனப் பகர்ந்த சுவாமி விவேகானந்தரின் திருமொழிக்கிலக்காக நாம் நடவாதிருந்தால் கலியன் கணப்பொழுதும் நம்மைவிட்டு நீங்குவனே? சென்ற 11 ஆண்டுகளாகளாகத் தீர்மானித்த எண்ணற்கரிய விஷயங்களைக் கண்டு கலங்கினனே? இன்றேல் பதவி வேட்டைப் பெரியோர்களைக்கண்டு பயந்தனனே? பின்னர் எவருக்குப் பயந்து ஒடுங்குவன்? சிறிதும் சுயநலமற்று, வைதீகத்தில் வெறுப்புற்று, பதவிவேட்டை ஆசையற்று, முன்னேற்ற மென்பதையே கடனாக நினைத்துச் சதாகாலமும் ஏக மனதுடன் பாடுபடும் இளஞ் சிங்கங்களுக்குத் தான் பயப்படுவன்.

காளைகளே! எழுங்கள், எழுங்கள். காலத்தை உணருங்கள். சமத்துவத்தை நிறுவுங்கள். குலத்தைப் பேணுங்கள். கலியனைக் காலால் உதையுங்கள். கோடரிக்காம்புகளையும், மூட பழக்க வழக்கங்களையும் வேரோடு களைய 12-வது மகாநாட்டிற்கு விஜயமாகுங்கள்.

ப. வே. ச. பழனிச்சாமி,
விருதுநகர்.

## உயிர்ப்பிராணிகளின் தன்மை.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 23-வது பிரசுரம்.)

அன்பர்களே!

பெறுதற்கு அரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதன் பகுத்தறிவால், நன்றிது தீதிது என்று அறிந்து, தன் உயிர் போன்று இதர ஜீவவர்க்கங்களின் உயிர்களையும் மேம்பாடுடன் ஓம்பி, அன்பு சொரூபமாய் விளங்க வேண்டியது கடமையாகும். நம்முடைய காலில் ஒரு சிறு முள் தைந்து விட்டால், நமது உயிர் சிறிது நேரமாவது உடலில் ஊசலாட, வலியின் கொடுமையால் வருந்த முற்றுத் துன்புறுகிறோம். இதுபோல் இதர ஜீவ கோடிகளும் தங்கள் உடலில் சிறிதளவாயினும் காயமுண்டானல் வாய் விட்டுச் சொல்ல முடியாமல், கதறிக் கதறிக் கண்ணீர் விடுகின்றன. இதை நாம் ஒவ்வொருவரும் நேரில் கண் கூடாகக் காண்கிறோம். இவைகளை யெல்லாம் தனது பகுத்தறிவால் அறிந்த மனிதன் தன்னைப் போன்ற உயிர்ப் பிராணிகளைக் கொன்று அவைகளின் மாமிசத்தைப் புசிக்கலாமா? உயிர் நிலை ஒடுங்கிய அவ்வுடல்களை நாம் உண்பதினால் உண்டாகும் பயன் என்ன?

ஆடு, கோழி முதலிய உயிர்ப் பிராணிகளும் மனிதனைப் போல் பார்த்தல், கேட்டல், ருசி பார்த்தல், உணர்தல், வாசனை அறிதல் முதலிய ஐம்புலன்களையும் அடைந்திருக்கின்றன. நம்மைப் போன்று, நன்மை தீமை என்று அறிய சக்தி யில்லாவிட்டாலும் கஷ்டம் வந்தபோது துன்பமும், சந்தோஷம் வந்தபோது ஓடி யாடி இன்பமும் கொள்ளுகின்றன. அவைகளும், மனிதனைப் போன்று, ஆணும் பெண்ணும் கூடிச் சூல் தரித்து, குட்டிகளையும் குஞ்சுகளையும் பெற்றெடுத்து, இரை தேடி, ஊட்டி வளர்த்து, சீராட்டிப் பாராட்டி வாழ்கின்றன. நம்மில் துக்கத்திற்கு அளவுண்டா? அது போன்று, உயிர்ப் பிராணிகளும் தங்கள் குட்டிகளையும் குஞ்சுகளையும் பறிகொடுத்தால் துன்புறு மென்று சொல்லவும் வேண்டுமோ? அப்படியும் அவைகள் துன்பப்படுவதை நாம் அறியோமோ? எல்லா நியாயங்களையும் அறிந்த நாம், நம்மைப் போன்ற உயிர்ப் பிராணிகளிடத்தில் கருணை காட்டி, அவைகளின் துன்பத்திற்குக் காரணமாகிய புலால் உண்பதை நிறுத்தி, அவைகளைக் காப்பாற்றும்படி வேண்டுகிறோம். நமது முன்னோர்களால் ஆக்கப்பட்ட நூல்களும், இதையே சதா பறையடித்துக் கொண்டே யிருக்கின்றன.

ஆகையால் அன்பர்களே! நமது அன்னையாம் ஸ்ரீ அம்பிகைக்குப் பங்குனிப் பொங்கலின் போது ஆடு, கோழிகளைப் பலியிட்டு ஆராதனை செய்யாமல் பால்ப் பொங்கலிட்டுப் பக்தியாய்க் கொண்டாடுவோம்.

## தங்க மணித் திரள்.

நாம் எப்பொழுதும் நல்லதையே செய்ய வேண்டும். பிறருக்கு உதவி செய்வதையே ஒரு உரிமை யென்று நாம் எப்பொழுதும் அறிய வேண்டும். நல்லது செய்ய வேண்டும் என்ற இச்சையே நம்மிடம் இருக்கும் சிறந்த தூண்டு கருவியாகும்.

* *

இவ் வுலகத்தில் மனிதன்தன் குற்றத்திற்கு நியாயஸ்தலங்களில் விசாரிக்கப் படுவதுபோல் அவ் வுலகிலும் கடவுள் முன்னிலையில் அவன் செய்த நியாய அநியாயங்களுக்கு விசாரிக்கப்பட்டு அநியாயங்களுக்குத் தண்டிக்கப் படுவான்.

* *

மரணமே இல்லாத வாழ்க்கை கிடையாது. அது போலவே துக்கமே இல்லாத சுகம் கிடையாது. வாழ்க்கை என்று சொல்லும் போதே அழிவு என்ற எண்ணம் பக்கத்தில் நிற்கிறது. சுகம் என்று சொல்லும் போதே துக்கம் என்ற எண்ணம் கூடவே நிற்கிறது.

* *

விளக்கானது எண்ணெய்யையும், திரியையும் எரித்துக் கொண்டே இராவிட்டால் பிரகாசம் கொடுக்காது. அதுபோலவே வாழ்க்கையைக் காப்பாற்ற நாம் நன்மையைச்செலவழித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

* *

வாழ்க்கையும் மரணமும் ஒரே வஸ்துவின் இரு பக்கங்கள். ஒருவன் மரணம் என்னும் பக்கத்தைப் பார்த்து அதனல் உலகத்தினிடம் வெறுப்பு அடைகிறான். ஒருவன் வாழ்க்கை என்னும் பக்கத்தைப் பார்த்துத் தைரியம் அடைகிறான்.

* *

நாம் எவரையும் வெறுத்தல் கூடாது. இவ் வுலகம் எப்பொழுதும் நன்மை தீமைகளின் கலப்பாகவே இருக்கிறது. நமது கடமையானது எப்பொழுதும் எளியவரிடம் அனுதாபம் பாராட்டிப் பிழை செய்வோரையும் அன்புடன் பாவிப்பது தான்.

ம. வே. அ. தங்கமணி நாடார்,
சிவகாசி.

## கண்டெடுத்த விக்கிரகம்.

இராமநாதபுரம் ஜில்லாவில் வண்டல் எனும் சிறு கிராமத்தில் ஒரு செட்டியார் தனது நிலத்தையுழுது கொண்டிருக்கும்போது ஏர்க்கலில் தட்டுப்பட்டு ஒரு பத்திரகாளியம்மன் உருவச் சிலை தென்பட்டது. அதைச் செட்டியார் பந்தோபஸ்தாய் வீட்டில் கொண்டு போய் வைத்தார். அன்றிரவு அச்செட்டியார் நித்திரையிலிருக்கும்போது, பத்திரகாளியம்மன் வந்து அச்சிலை ஆதியில் அக்கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள மஞ்சப்பட்டணம் எனும்கிராமத்தில் இடிந்து கிடந்து இப்போது புதிப்பிக்கப்பட்டிருக்கும் நாடார்கள் பத்திரகாளியம்மன் கோவிலிலிருந்ததாகவும், பின்னொரு காலத்தில் பெரும் வெள்ளப் பெருக்கெடுத்து அக்கோவில்பாழ்போய் அச்சிலை வண்டல்கிராம நிலத்தில் புதைபட்டு விட்டதாகவும், முன்னுள் அச்செட்டியார் நாடார்குலத்திற் பிறந்திருந்ததினுல் தான் இப்போது அச்சிலையை அவர் கண்ணுக்குக் காண்பித்ததாகவும், இனி அவர் அச்சிலையை வைததிராமல் மஞ்சப்பட்டணம் பத்திரகாளியம்மன் கோவிலில் சேர்த்து விட வேண்டுமென்றும், இலையேல் பல இடுக்கண்கள் விளையுமென்றும் கூறி மறைந்தது போல் கனவு கண்டெழுந்தார். இம்மாதிரி கனவு கண்டும் அம்மனின் உத்தரவுப்படி அச்சிலையை ஒப்படையாமலிருந்தபடியால் பல துன்பங்கள் நிகழ செட்டியார் பயந்து அம்மனை வந்தித்து இதுபற்றிய விபரங்களைத் தம் கூறி சிலையை மஞ்சப்பட்டணம் நாடார்கள் வசம் ஒப்புவித்து கும்பாபிஷேகத்திற்கும் கொஞ்சம் பொருளுதவி செய்ய, நாடார்கள் தமது பத்திரகாளியம்மன் கோவிலில் அதை வைத்துச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்து முடித்தனர் என்று மஞ்சப்பட்டணம் ஸ்ரீமான் மு. ரா. முத்துநாடார் எழுதுகிறார்.

## ஐக்கிய சங்க வாசகசாலை, பிரகாசபுரம்.

இதுவரையும் காரியதரிசி வீட்டில் நடைபெற்ற மேற்கண்ட வாசகசாலை 13—4—28 (விபவஞு சித்திரை மீ 1 உ) முதல் ஓர் வாடகைக் கட்டடத்தில் நடைபெறுகின்றது. வாடகைக் கட்டடத்தில் வாசகசாலைத் திறப்பு விழா இனிது நடைபெற்றது. வாசகசாலைத் திறப்பு விழா வன்று எங்களைச் சிறப்பிக்கவந்த பெரியோர்க்கும் பலவிதத்திலும் உதவிபுரிந்த கனவான்களுக்கும் எமதன்பான வந்தனத்தை வணக்கத்துடன் செலுத்துவதோடு, இதில் சம்பந்தப்படக்கூடிய ஒவ்வொருவரையும் கூடிய சீக்கிரம் இவ்வாசகசாலையின் அங்கத்தினராகச் சேர்ந்து கொள்ள அன்புடன் விரும்பிக் கேட்கிறோம்.

த. வே. சாமுவேல்நாடார்,
காரியதரிசி & பொக்கிஷதார்.

## மதிப்புரைகள்.

### "பிரசண்ட மகா விகடன்".

இப்பெயர் புனைந்த விகட மாதாந்தப் பத்திரிகையின் முதல் வருட முதற் சஞ்சிகை யொன்று எமது பார்வைக்கு வரப் பெற்றோம். இது திருச்சினுப்பள்ளியி னின்றும் ஸ்ரீமான் சு. கனகசபாபதியாரவர்களின் பத்திராதிபத்தியத்தின் கீழ் புத்தக ரூபத்தில் வெளி வந்திருக்கிறது. இது தன் பெயருக்கேற்ப விகடப் பிரதாபங் காட்டியிருக்கிறது. உலகத்தில் காணக்கிடக்கும் ஊழல்களை ஒழிக்கும் கருத்துக் கொண்டு வெளி வந்திருப்பதாய்த் தெரிகிறது. இதுகுற்றங்குறைகளைவெளியிடுவதில் சற்றும் அஞ்சாத பத்திரிகையாகும். சீர் கேடுகளைச் சிரிப்புத் தன்மையில் விளக்கி நேர்மைப் படுத்துகிறது. ஆசியங்களுடன் சமாச்சாரக் குறிப்புகளும், மற்ற விஷயங்களும் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. வருடச் சந்தா ரூபாய் 1—8—0. தேவையானவர் "பிரசண்ட மகா விகடன் ஆபீஸ், பாலக்கரை, திருச்சினுப்பள்ளி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

### "இந்திய விவசாயம்"

மேற் கண்ட மாதாந்தப் பத்திரிகையின் 7-ம் ஆண்டாரம்பச் சஞ்சிகையொன்று வரப் பெற்றோம். இஃது ஸ்ரீமான் ஜி. கிருஷ்ண மூர்த்தி அவர்களை ஆசிரியராய்க் கொண்டு திருச்சினுப்பள்ளியி னின்றும் வெளிவருகிறது. புத்தக ரூபத்திலுள்ளது. இந்திய விவசாயம் பற்றிய விஷயங்களும் மற்றைய விஷயங்களும், செவ்வனே தீட்டப் பெற்றிருக்கின்றன. இதை விவசாயிகள் ஆதரிக்க முக்கியமாய்க்கடமைப் பட்டுள்ளவர்கள். வருடச் சந்தா ரூபாய் 1—0—0. தேவையுள்ளவர் "மானேஜர், இந்திய விவசாயம்" ஆபீஸ், தெப்பக்குளம், திருச்சினுப்பள்ளி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

## கள்ளிக்குளம் பால்ய நாடார் சங்கம், கொழும்பு.

கள்ளிக்குளம் பால்ய நாடார் சங்க 6-வது வருட 1-வது மாதாந்தக்கூட்டம் சென்ற 8—5—28-ல் இரவு 9—30 மணிக்கு உணுப்பெட்டி 5-ம் நிர். கட்டடத்தில் ஸ்ரீமான் பு. வி. ஏசுவடிய நாடாரவர்களின் தலைமையின் கீழ் நடந்தேறியது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீமான் வி. மி. மிக்கேல் நாடாரவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டதும் தலைவரவர்கள் முகவுரைப் பிரசங்கம் நடந்தது. பின் சென்ற மாதத்தின் புது வருட உத்தியோகப் பதவிகளை ஏற்றுக்கொண்ட சில கனவான்கள் வரத் தவறினதால் அவண் விஜயம் செய்துள்ள பொதுஜன அபிப்பிராயப்படி முறையே கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள்நியமனம்செய்யப்பெற்றார்கள். அதன் விபரம்:—சென்ற மாதம் நியமுகம் செய்யப்பட்ட கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் ம. ம. நட்சேத்திர நாடாரவர்கள் அவண் விஜயம் செய்துள்ளதால் அன்னவர்களே காரியதரிசியாகவும், வாத்தவறிய உத்தியோகஸ்தர்களுக்காக ஸ்ரீமான்களான வி. அ. மரியநாடார் கௌரவ பொக்கிஷதாராகவும், பு. வி. யேசுவடியநாடார் கௌரவ பிரசிடென்டாகவும், சூ. அந்தோனிநாடார் கௌரவ பரிசோதகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்ற மாதத்தீர்மானப்படியே புது உத்தியோகஸ்தர்களிடம் சங்கமுழு ஆதாரங்களையும் பொதுஜன முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டன. அதில் கனம் பொக்கிஷதாரிடம் ஒப்படைக்கப்பட்ட கணக்கு விபரம்:— கொடுக்கல் வாங்கல் விஷயமாக

| | ரூ சதம். |
|---|---|
| நோட்டுவகையில் | 873—30 |
| ரொக்கமாகக் கொடுத்தது | 204—60 |
| ஆகமொத்தம்ஒப்படைத்தது | 1077—90 |

பின் தலைவரவர்களால் முடிவுரை கூறப்பட்டதும் ஸ்ரீமான் சூ. அந்தோனிநாடாரவர்கள் ராஜவாழ்த்துப் பாட 2-மணிக்குக் கூட்ட மினிது கலைந்ததெனக் கௌரவ காரியதரிசி எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஏழாம் அத்தியாயம்.

### 1. இந்தியா சென்று திரும்பியது.

இவ்வாறு நேட்டால் இந்தியக் காங்கிரஸ் நிலையான அடிப்படையின் மீது அமைக்கப்பட்டது. நேட்டாலில் ஏறக்குறைய இரண்டரை வருஷ காலம் நான் கழித்தேன். இக் காலத்தில் பெரிதும் அரசியல் வேலையே செய்து கொண்டிருந்தேன். இனியும் நாம் தென்னாப்பிரிக்காவிலேயே வசிப்பதானால் என் மனைவி மக்களை இந்தியாவிலிருந்து அழைத்து வர வேண்டுமென்று இப்போது கருதலானேன். மற்றும், தாய் நாட்டில் சிறிது சுற்றி இந்தியத் தலைவர்களுக்குத் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நிலைமையைப் பற்றித் தெரிவிக்க வேண்டுமென்றும் எண்ணினேன். காங்கிரஸ் எனக்கு ஆறு மாத விடுமுறை யளித்தது. நேட்டாலில் பிரசித்தி பெற்ற வியாபாரியான காலஞ் சென்ற ஆதம்ஜி மியாகான் எனக்குப் பதிலாகக் காரியதரிசியாக நியமனம் பெற்றார். அவர் தமது கடமை மிகத் திறமையுடன் ஆற்றினார். அவருக்கிருந்த சொற்ப ஆங்கில பாஷா ஞானத்தைப் பழக்கத்தினால் நன்கு வளர்த்துக் கொண்டிருந்தார். குஜராத்தி மொழியும் அவர் சாதாரணமாகப் படித்திருந்தார். அவருக்கு வியாபார சம்பந்தங்கள் பெரும்பாலும் ஸுலு சாதியாருடன் இருந்தபடியால், ஸுலு பாஷையையும் அவர் நன்கு கற்றிருந்ததோடு, அச்சாதியாரின் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்திருந்தார். சாந்தமும் இனிமையும் பொருந்திய சுபாவமுடையவர்; அதிகப் பேச்சுக்காரரல்லர். நான் இந்த விவரங்களை யெல்லாம் கூறுவது எதற்காக வெனின், பொறுப்புள்ள பதவிகளை வகிப்பதற்கு ஆங்கில ஞானத்தையும், புத்தகப் படிப்பையும் விட வாய்மை, பொறுமை, சகிப்புத் தன்மை, உறுதி, மனோ தைரியம், அநுபவ அறிவு என்னும் அவை அதிக அவசியமான குணங்கள் என்பதைக் காட்டுவதற்கே யாகும். இந்த நற்குணங்கள் இல்லாதவரையில் மிகச் சிறந்த புலமையும் பொது ஊழியத்திற்குப் பயன்பட மாட்டாது.

1896-ம் ஆண்டின் மத்தியில் நான் இந்தியா திரும்பினேன். அப்போது ஒப்பந்தத் தொழிலாளிகள் கல்கத்தா அல்லது சென்னையிலேயே கப்பல் ஏற்றப்பட்டு வந்தார்கள். ஆதலின் நேட்டாலிலிருந்து கல்கத்தாவுக்குச் சுலபமாகக் கப்பல்கள் கிடைத்து வந்தன. எனவே அங்கருக்குச் சென்ற கப்பல் ஒன்றிலேயே நானும் பிரயாணமானேன். இதற்குக் காரணம் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்குப் போகும் வழியில், அலகாபாத்தில் ரயில் தவறிவிடவே ஒரு நாள் அந்நகரில் தங்க வேண்டியதாயிற்று. "பயனியர்" பத்திரிகாசிரியரான மிஸ்டர். செஸ்னியை அங்கு பார்த்தேன். என்னிடம் அவர் மரியாதையாகப் பேசினாராயினும், தமது அநுதாபங்கள் வெள்ளைக்காரர் பக்கமே இருப்பதாகக் கூசின்றித் தெரிவித்தார். எனினும் நான் ஏதேனும் எழுதினால் அதைப் படித்துப் பார்த்துத் தமது பத்திரிகையில் அபிப்பிராயம் எழுதுவதாக ஒப்புக் கொண்டார். இதுவே எனக்குத் திருப்தி யளித்தது.

### திலகரின் பெருந் தன்மை.

இந்தியாவிலிருந்தபோது தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமையைப் பற்றி நான் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதி வெளியிட்டேன். அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் அதைப் பற்றி அபிப்பிராயம் எழுதின. அதற்கு இரண்டாவது பதிப்பும் வெளியிட வேண்டியதாயிற்று. இந்தியாவின் பற்பல இடங்களிலும் 5000 பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. இம் முறையில் நான் இந்தியத் தலைவர்கள் பலரையும் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பம்பாயில் ஸர். பிரோஸிஷா மேதா, நீதிபதி பட்ருடீன் தயாப்ஜி, மகாதேவ கோவிந்தரானடே முதலியோரையும், பூனாவில் ஆசிரியர் பந்தர்க்கார், லோகமான்ய திலகர், கோபால கிருஷ்ண கோகலே முதலியோரையும் கண்டேன். பம்பாய், பூனா, சென்னை முதலிய இடங்களில் உபந்நியாசங்களும் செய்தேன். இந் நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கு விவரிக்கும் உத்தேசம் எனக்கில்லை.

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

### மகாத்மா காந்தி எழுதியது.

ஆனால், நமது விஷயத்திற்கு அவ்வளவு சம்பந்த மில்லாத தெனினும், பூனாவைப் பற்றிய ஒரு இனிய ஞாபகத்தை நான் இங்கு குறிப்பிடாமல் மேற் செல்ல முடிய வில்லை. அங்கு ஸர்வ ஜன சபை லோகமான்யராலும், தக்காண சபை கோகலேயாலும் நடத்தப்பட்டு வந்தன. முதலில் நான் திலக மகா ராஜரைப் பார்த்தேன். பூனாவில் ஒரு கூட்டம் நடத்த வேண்டுமென்னும் என் உத்தேசத்தை அவரிடம் தெரிவித்தபோது கோபால ராவைப் பார்த்தீர்களா என்று அவர் என்னைக் கேட்டார். அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று எனக்கு விளங்க வில்லை. ஆதலின் மறுபடியும் கோகலேயைப் பார்த்தீர்களா என்றும், அவரைத் தெரியுமா என்றும் கேட்டார்.

"நான் இன்னும் அவரைப் பார்க்க வில்லை. அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். பார்க்கவும் உத்தேசித்திருக்கிறேன்" என்றேன்.

"இந்தியாவின் அரசியலைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாதுபோல் காணப்படுகிறதே" என்றார் லோகமான்யர்.

"இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின்னர் இந்தியாவில் நான் சில காலம் தான் வசித்தேன். அப்போது அரசியல் விஷயங்களில் கவனம் செலுத்தவில்லை. அரசியல் என் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்றெண்ணினேன்" என்றேன்.

அப்போது லோகமான்யர் கூறியதாவது:— "அப்படியானால் உங்களுக்குச் சில விவரங்கள் நான் சொல்ல வேண்டும். பூனாவில் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. சர்வ ஜன சபையைச் சேர்ந்தவர்கள் ஒரு கட்சி; தக்காண சபையைச் சேர்ந்தவர்கள் மற்றொரு கட்சி".

"இதைப் பற்றிக் கொஞ்சம் கேள்விப் பட்டிருக்கிறேன்" என்று நான் கூறினேன்.

### பூனா கூட்டம்.

லோகமான்யர் மேலும் கூறியதாவது:— "இங்கே பொதுக் கூட்டம் நடத்துவது சுலபம். ஆனால் நீங்கள் இங்குள்ள எல்லாக் கட்சியாரிடமும் உங்கள் விஷயத்தைச் சொல்லி எல்லாருடைய ஆதரவையும் பெற விரும்புவதாகத் தெரிகிறது. அது நல்ல காரியமே. ஆனால் சர்வ ஜன சபையைச் சேர்ந்த ஒருவர் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்தால் தக்காண சபையைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் வரமாட்டார்கள். அவ்வாறே தக்காண சபையைச் சேர்ந்தவர் ஒருவர் தலைமை வகித்தால் சர்வ ஜன சபையைச் சேர்ந்தவர்கள் வரமாட்டார்கள். ஆகையால் எக் கட்சியையும் சேராத அக்கிராசனர் ஒருவரை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும். நான் யோசனை தான் கூறமுடியும். வேறு உதவி எதுவும் செய்வதற்கில்லை. ஆசிரியர் பந்தர்க்கர் உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் நீங்கள் அவரைப் பார்க்க வேண்டும். அவர் நடு நிலையாளர் என்று கருதப்படுகிறார். அவர் அரசியலில் கலந்து கொள்வதில்லையாயினும் ஒருகால் உங்கள் தூண்டுதலுக் கிணங்கி உங்கள் கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்க இசையலாம். இதைப் பற்றி ஸ்ரீ கோகலே யிடம் தெரிவித்து அவருடைய யோசனையையும் கேளுங்கள். அநேகமாக நான் கூறும் புத்திமதியையே அவரும் சொல்லலாம். ஆசிரியர் பந்தர்க்கர் போன்ற பெரியவர் ஒருவர் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இசைந்தால் இரு கட்சியாரும் கூட்டத்தை நன்றாக நடத்தி வைக்க முயல்வார்களென்பது நிச்சயம். எவ்வண்ணமாயினும் எங்களுடைய முழு உதவியையும் நீங்கள் எதிர் பார்க்கலாம்.

பின்னர் ஸ்ரீ கோகலேயைப் பார்த்தேன். முதல் முறை அவரைப் பார்த்தவுடனேயே அவர் மீது 'காதல்' கொண்டு விட்டது குறித்து வேறோரிடத்தில் எழுதி யிருக்கிறேன். இதைப் படிக்க ஆவலுள்ளவர்கள் "எங் இந்தியா", "நவஜீவன்" பழைய இதழ்களைப் புரட்டுவார்களாக. லோகமான்யர் எனக்கு அளித்த புத்திமதி கோகலேயுக்கும் பிடித்திருந்தது. எனவே பெரியவரான ஆசிரியர் பந்தர்க்கரைக் கண்டு நமஸ்கரித்தேன். நேட்டாலில் இந்தியருக் கிழைக்கப்படும் அநீதிகளைப் பற்றிய விவரத்தை அவர் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பின்னர் அவர் கூறியதாவது:—"நான் பொது வாழ்வில் அதிகம் தலையிடுவதில்லை யென்பது உங்களுக்கே தெரியும். ஆனால் நீங்கள் சொன்ன விஷயம் எனக்குப் பெரிதும் உணர்ச்சி யளித்திருக்கிறது. எல்லாக் கட்சியாருடைய ஒத்துழைப்பையும் நாடுவதென்னும் உங்கள் யோசனையும் எனக்குப் பிடித்திருக்கிறது. நீங்கள் இளைஞர்; இந்தியாவின் அரசியல் நிலையைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. நான் உங்கள் வேண்டுகோளுக் கிசைந்ததாக இரு கட்சியாரிடமும் தெரிவியுங்கள். கூட்டம் நடக்கிற தென்று அவர்களில் யார் சொல்லி யனுப்பினாலும் நான் அவசியம் வந்து அக்கிராசனம் வகிக்கிறேன்". எனவே பூனாவில் ஒரு நல்ல கூட்டம் நடந்தது. இரு கட்சித் தலைவர்களும் வந்திருந்து என் கட்சியை ஆதரித்துப் பேசினார்கள்.

### மீண்டும் புறப்பாடு.

பிறகு சென்னை சென்றேன். அங்கு ஸர். (அப்போது நீதிபதி) சுப்பிரமணிய ஐயர், பி. அனந்தாச்சார்லு, "ஹிந்து" ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், "மெட்ராஸ் ஸ்டாண்டர்டு" ஆசிரியர் பரமேசுவரம் பிள்ளை, பெயர் பெற்ற வக்கீலான பாஷ்யம் ஐயங்கார், மிஸ்டர் நார்ட்டன் முதலியோரைப்பார்த்தேன். ஒரு பெரிய கூட்டமும் நடந்தது. சென்னையிலிருந்து கல்கத்தா போந்து அங்கு சுரேந்திர நாத் பானர்ஜி, மகாராஜா ஜோதீந்திர மோஹன் டாகூர், "இங்கிலீஷ்மான்" ஆசிரியரான காலஞ் சென்ற மிஸ்டர். ஸாண்டர்ஸ் முதலியவர்களைப் பார்த்தேன். கல்கத்தாவில் ஒரு பொதுக் கூட்டங் கூட்ட ஏற்பாடு நடந்து கொண்டிருந்த போது என்னை உடனே திரும்பி வரும்படி கேட்டுக் கொண்டு நேட்டாலிலிருந்து தந்தி வந்தது. இது 1896 நவம்பரில். இந்தியர்களுக்கு விரோதமான ஏதோ முயற்சி தொடங்கப் பட்டிருக்கிறதென அறிந்தேன். ஆதலின் கல்கத்தாவில் என் வேலையை அரை குறையாகவே விட்டுப் பம்பாய்க்குச் சென்றேன். இடம் கிடைத்த முதலாவது கப்பலில் என் குடும்பத்துடன் புறப்பட்டேன். தாதா அப்துல்லா கம்பெனியார் 'கோர்லாண்டு' என்னும் கப்பலை வாங்கி யிருந்தார்கள். புது முயற்சிகளில் இறங்கும் துணிவு கொண்ட அக் கம்பெனியார் போர் பந்தருக்கும், நேட்டாலுக்கும் இடையில் இக்கப்பலை விட்டுவர எண்ணியிருந்தார்கள். அக் கப்பல் புறப்பட்ட அடியுடன் பர்ஷியன் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைச் சேர்ந்த 'நாடேரி' என்னும் கப்பலும் கிளம்பிற்று. இரண்டு கப்பல்களிலும் ஏறக்குறைய 800 பிரயாணிகள் இருந்தார்கள்.

### ராய்ட்டர் செய்தி.

இந்தியாவில் செய்யப்பட்ட கிளர்ச்சி சிறிது முக்கிய மடைந்தபடியால் அதைப் பற்றிப் பிரபல இந்தியப் பத்திரிகைகள் அபிப்பிராயம் எழுதும்படியும், ராய்ட்டர் இங்கிலாந்துக்குத் தந்தி அனுப்பும்படியும் ஆயின. இந்த விவரம் நேட்டால் சேர்ந்த பின்னரே நான் அறிந்தேன். இங்கிலாந்திலுள்ள ராய்ட்டர் பிரதிநிதி இந்தியாவில் நான் செய்த பிரசங்கங்களின் சுருக்க மடங்கிய சிறு தந்திச் செய்தி ஒன்றைத் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பியிருந்தார். செய்தி சிறிதாயினும் அதில் நான் கூறியவை பெரிதும் மிகைப்படுத்தப் பட்டிருந்தன. இது அசாதாரண அநுபவ மன்று. இவ்வாறு மிகைப்படுத்துதல் எப்போதுமே வேண்டுமெனச் செய்வதன்று. வேலை மிகுதி யுள்ளவர்களும், ஏற்கனவே விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகியிருப்பவர்களுமான மனிதர்கள் மேலெழுந்தவாரியாக எதையோ படித்து அதன் சுருக்கத்தைத் தயாரிக்கிறார்கள். இச் சுருக்கம் சில சமயம் அவர்களுடைய மனோ கற்பனையாகவே இருந்து விடுகிறது. இந்தச் சுருக்கம், மறுபடியும், பல இடங்களில் பலவாறாக வியாக்யானம் செய்யப்படுகின்றது. இவ்வாறு, எவரும் வேண்டு மென்று செய்யாவிடினும் உண்மை விஷயம் முற்றும் திரிக்கப்பட்டு வருகிறது. பொது ஊழியத்தில் உள்ள அபாயம் இதுவே யாகும். அதன் குறைபாடும் இது தான்.

இந்தியாவி லிருந்தபோது நான் நேட்டால் வெள்ளைக்காரர்களைக் குறை கூறியது உண்மையே. ஒப்பந்தத் தொழிலாளிகள் மீது 3 பவுன் தலைவரி விதிப்பது பற்றி நான் பலமாகக் கண்டித்துப் பேசி யிருந்தேன். எஜமானனால் புடைக்கப்பட்ட சுப்பிரமணியம் என்னும் ஒப்பந்தத் தொழிலாளியின் துன்பங்களைப் பற்றி நான் தெளிவாக எடுத்துக் கூறி யிருந்தேன். அவனுடைய காயங்களை நானே பார்த்தவன். அதனுக்காக நான் நடவடிக்கையும் எடுத்துக் கொண்டவன். என்னுடைய பேச்சுகளின் திரிக்கப்பட்ட சுருக்கத்தை நேட்டால் வெள்ளைக்காரர்கள் படித்தபோது என் மீது மிகவும் கோபங் கொண்டார்கள். இதில் மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நான் இந்தியாவில் எழுதியதையும் பேசியதையும் விட அதிக விரிவாகவும் கடுமையாகவும் நேட்டாலில் பேசியதும் எழுதியதும் உண்டு. இந்தியாவில் நான் செய்த பிரசங்கங்கள் மிகைப்படுத்தல் என்னுங் குற்றம் அறவே நீக்கப் பெற்றனவாகும். அதற்கு மாறாக, தென்னாப்பிரிக்காவில் உள்ள நிலைமையைச் சிறிது குறைவு படுத்தியே இந்தியாவில் கூறினேன். புதிய மனிதனிடம் ஒரு விஷயத்தைச் சொன்னால் நாம் உத்தேசிப்பதை விடச் சிறிது மிகைப்படவே அது அவனுக்குத் தோன்றும் என்று அநுபவத்தில் அறிந்திருந்தே னாதலின் வேண்டுமென்றே அப்படிக் குறைவு படுத்திச் சொன்னேன். ஆனால் நேட்டாலில் நான் எழுதியதை மிகச் சில வெள்ளைக்காரர்களே படித்தார்கள்; அதைப் பொருட்படுத்தியவர் இன்னும் சிலராவர். இந்தியாவில் நான் எழுதியவையும், பேசியவையும் இவ்வாறில்லை. ராய்ட்டரின் சுருக்கங்களை ஆயிரக் கணக்கான வெள்ளைக்காரர்கள் படித்தார்கள். மற்றும், தந்தி மூலம் அனுப்புவதற்குரியது என்று கருதப்பட்ட ஒரு செய்தியாவது அதற்குள்ள முக்கியத்தை விட அதிக முக்கியம் அடைகின்றது. எனவே நேட்டால் வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் நான் செய்த வேலைக்குப் பெரிதும் முக்கியம் அளித்தார்கள். ஆதலின் ஒப்பந்தத் தொழிலாளர் அனுப்பும் முறைக்கே ஒருவேளை முடிவு ஏற்படலாமென்றும் அதனால் வெள்ளைத் தோட்டக்காரர்கள் துயருறுவார்களென்றும் அவர்கள் கருதினார்கள். இவையன்றி, இந்தியாவில் தங்கள் பெயருக்கு அபகீர்த்தி நேர்ந்ததாகவும் எண்ணினார்கள்.

---

சாந்த வழி நின்று தம் வய
[முள்ளவரை
பாந்தங் கொண்டாடல்
[பண்பு.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection